Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 25 (17.02.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:139

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
வங்கிக் கணக்கு தேவையில்லை.
தரகு (Commission) ஏதுமில்லை.
எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 0602212472
(சி/2228)

# கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்கள்; பட்டியலைக் கோருகிறார் ஆனந்தசங்கரி!

## புதிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழு கூட்டம்

புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்ட கூட்டணியின் பேச்சாளர் ஒருவர் - இன்றைய கூட்டத்தில் புதிய கூட்டணியின் நிர்வாக உறுப்பினர்களின் விபரம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, புதிய கூட்டணி தனது தேர்தல் பிரசாரத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை அநுராதபுரத்தில் ஆரம்பிக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## சம்பந்தனுக்கு கடிதம் அனுப்பப்பட்டது

(கொழும்பு)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழுக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெற இருப்பதால், அதற்கு முன்னர் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலை, உடனடியாகத் தனது பார்வைக்குத் தருமாறு கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சியின் செயலாளர் ஆர்.சம்பந்தனுக்கு நேற்று எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.**

**அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,**



எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தின் கால அவகாசத்தை கருத்தில் கொண்டு சில துரித, ஆனால் முறையான முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. எனவே, இது தொடர்பாக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியுள்ளது. எனவே, பின்வரும் ஆவணங்களை எனது பார்வைக்கு உடனடியாகத் தரவேண்டும்.

கட்சி சார்பாக பல்வேறு மாவட்டங்களிலும் போட்டியிட விரும்பி விண்ணப்பித்தவர்களின் விபரங்கள் அவர்களது விண்ணப்பப்படிவங்களுடன் தரவேண்டும்.

விண்ணப்பங்கள் கோரி விளம்பரங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளிநொச்சியில் கூட்டமைப்பு தலைவர்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இன்று காலை 11 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோனியாவின் விசேட தூதுவர் பிரபாவை சந்திக்கவுள்ளாராம்!

### சுப்பிரமணிய சுவாமி தெரிவித்ததாக இந்திய பத்திரிகை தகவல்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இன்று கிளிநொச்சியில் சந்திப்பதற்காக இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் ராஜ்ய சபை உறுப்பினருமான எட்வோடோ பெலாரோவை காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அனுப்பிவைத்துள்ளதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவத்ததாக, இந்தியப் பத்திரிகையொன்று நேறறு செய்தி வெளியிட்டது.

இது தொடர்பாக சுப்பிரமணியம் சுவாமியை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் கரிசனையுடன் செயற்பட வேண்டும்

## ஹொவ்டேயுடனான சந்திப்பில் புலிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர்ஜெனரல் புறூவ் ஹொவ்டே இராணுவம், பொலிஸ் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புக்களை தனித்தனியாகச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவையும், யாழ்.மாவட்ட சிரேஷட பொலிஸ் அத்தியட்சகர் வானகுருகே மற்றும் படையதிகாரிகளையும் புறூவ் ஹொவ்டே சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பில் தேர்தல் காலத்தில் இராணுவம், பொலிஸ் குடாநாட்டில் எத்தகைய நடைமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்பது குறித்தும், யுத்தநிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் கடைப்பிடிப்பது குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், புறூவ் ஹொவ்டேக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் சார்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி, யாழ்.மாவட்டதுணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மற்றும் இமயவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களை, புறூவ் ஹொவ்டேயுடன் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த கிறிக் வொலன்,போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் டானிஅனன், சமாதான செயலகத்தைச் சேர்ந்த விங்கொமாண்டர் ராஜா விக்கிரமசிங்க ஆகியோர் சநதித்து உரையாடினர்.

இந்தச்சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் பல்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஹொவ்டேயை சந்தித்த இராணுவ - பொலிஸ் அதிகாரிகள்.



ஹொவ்டேயுடனான சந்திப்பில் புலிகள்.

## வொஷிங்ரனில் இன்று உதவி வழங்கும் நாடுகள் கூட்டம்

(வொஷிங்ரன்)

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு மாநாடு இன்று வொஷிங்ரனில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டிற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்கள துணைச் செயலாளர் றிச்சட் ஆர்மிரேஜ் தலைமை தாங்குவார்.

ரோக்கியோவில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாட்டின் இணைத் தலைவர்களாக கடமையாற்றிய நாடுகளின் பிரதிநிதிகளும், இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி மற்றும் நோர்வே, ஐரோப்பிய ஆணைக் குழு, அமெரிக்க பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கை அரசின் பிரதிநிதிகள் இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று உரையாற்றுகிறார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்றிரவு 8.30 மணிக்கு நாட்டுமக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

இவரது உரை அரச மற்றும் கொழும்பிலுள்ள தனியார் ஊடகங்களில் ஒலிபரப்பாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் குறித்தே பிரதமர் ரணில் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனால் இருப்பதற்கு வீடின்றித் தவிக்கிறோம்!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனால் - வீடின்றித் தவிக்கிறோம் எங்களுக்குச் சரியான நீதி பெற்றுத் தாருங்கள் எனக்கோரி யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் 40 குடும்பங்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளன.

அராலி வீதி, புதிய குடியிருப்பு என்னும் இடத்தில் வசித்துவரும் 40 குடும்பங்களின் அங்கத்தவர்களே இந்த முறைப்பாட்டை நேற்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களின் முறைப்பாட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

குடியிருப்புப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய வீடுகளை அமைத்துத் தருவதாகத் தெரிவித்து முதற்கட்டமாக 20 ஆயிரம் ரூபாவை முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கினார்.

பின்னர் எமது வீடுகளைப் பிடுங்கிப் புனரமைக்குமாறு கூறி ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும் உறுதியளித்தார். அவரது சொல்லை நம்பி நாம் முதல் அமைத்திருந்த தற்காலிக கொட்டில்களையும், வீடுகளையும் உடைத்தோம். எனினும், நாடாளுமன்றம் கடந்த 7 ஆம் திகதி கலைக்கப்பட்டதும், அமைச்சரோ, அமைச்சரது அலுவலர்களோ எம்முடன் எந்தவித தொடர்பையும் ஏற்படுத்தவில்லை. நாம் அமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்று இது குறித்துக் கேட்டபோது - உறுதியளித்தபடி செய்துதரப்படும் எனத் தெரிவித்தனர்.

எனினும், கடந்த 11 ஆம் திகதி அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டபோது, இந்து கலாசார அமைச்சுப் பதவியும் இல்லாதுபோனது. இதனைத் தொடர்ந்து எமக்கு கூறிய தொகைப் பணத்தையோ அல்லது திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கான பொருட்களையோ வழங்க முடியாதென முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் மறுத்துள்ளார்.

இந்தநிலையில், குழந்தைகள், முதியவர்கள், பெண்களென வசிக்கும் எமது குடும்பம் நடுத்தெருவில் நிற்க வேண்டியநிலை தோன்றியுள்ளது. இதற்கு தங்கள் ஆணைக்குழு ஊடாக சரியான தீர்வு கிடைக்கவேண்டுமென அவர்கள் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)





யாழ் - கலட்டி சந்திப் பகுதியில் பொதுமக்களின் வீடுகள், கடைகள் என்பவற்றில் நிலை கொண்டிருந்த படையினர் அங்கிருந்து வெளியேறிய பின்னர் சில காட்சிகள்.

## சிவராத்திரி தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்.மடம் வீதியில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையம் கலை நிகழ்வுகளை நடத்தவுள்ளது. இந்த நிகழ்வுகள் சனசமூக கலை அரங்கில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. ஆரம்ப நிகழ்வுகள் மாலை 6 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து இசை நடனம் திருவள்ளுவர் சனசமூகநிலைய சிறுமியரால் நடத்தப்படும். அடுத்து 'விதியின் ரதங்கள்', 'தவறிய சின்னம்', தாயின் கடன்' ஆகிய நாடகங்கள்- புதுயுக நாடக கலாமன்றத்தின் உருவாக்கத்தில் பி.ரி.திருவின் படைப்புக்களாக இவை அரங்கப்படுத்தப்படுகிறது.

அடுத்து, யாழ். கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையத்தினர் வழங்கும் 'நிலைமை மாறவேண்டும்' எனும் சமூக சீர்திருத்த நாடகமும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பாலையூர் புதுவையூர் கலாமன்றம் வழங்கும் சங்கிலியன் தென்மோடி நாட்டுக்கூத்து இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இன்னிசை கானங்களும் இடம்பெறும் என திருவள்ளுவர் நிலைய விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

(205)

☆ ☆

ஆறுகால்மடம் அரசடி வைரவர் ஆலயத்தில் சிவராத்திரி தினமன்று விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (91)

☆ ☆ ☆

வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவில் மகாசிவராத்திரி விழா நாளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து முன்று சாமப் பூசைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

☆ ☆ ☆

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில், மகா சிவராத்திரி விழா - நாளை மாலை 6.30 மணி முதல், மறுநாள் காலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஓங்காரம், காயத்திரி, கொடியேற்றம், சிவநாம பஜனை, வில்வ அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன.(111)

☆ ☆

(யாழ்ப்பாணம்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு நாகவரத நாராயணர் தேவஸ்தான மகா சிவராத்திரி விரத பூசை நாளை இரவு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மூன்று சாமப் பூசைகளும், இடையிடையே பக்திப் பாடல், சமய சொற்பொழிவுகள் என்பனவும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(206)

☆ ☆ ☆

அகாயக்குளம் விநாயகர் ஆலய சிவராத்திரி விரத கலைநிகழ்வுகள் நாளை மாலை 5.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்று மாலை 6 மணிக்கு ஆலய பூசை, 6.30 மணிக்கு பசுக்கள் ஊர்வலமும் இடம்பெறவுள்ளது.

ஆலய அறங்காவலரும் போசகருமான சு.செந்தில்நாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அராலி)

வட்டு. கார்த்திகேய வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக சங்கானை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.செலலையாவும், சிறப்பு விருந்தினராக பொன்மலர் ராஜேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(118)

☆ ☆ ☆

எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சி.குணநாதன் தலைமையில் பி.ப 1.30 மணி யளவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் பிரதம விருந்தினராகவும், முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் இலங்கையர் கணேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(36)

## இந்துகலாசார அமைச்சின் ஏற்பாட்டில் ஆவரங்காலில் மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகம் இந்த வருடத்திற்கான மகா சிவராத்திரி விழா, ஆவரங்கால் சிவன் கோவில் சிவ சக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் - சிறப்புச் சொற்பொழிவுகள், நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, கலை நிகழ்வுகள் பலவும் நடைபெறவுள்ளன. ஆவரங்கால் சிவன் கோவிலில் நான்கு சாமப் பூசைகள் மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகளை ஆலயத்தின் நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர். பிற்பகல் 4 மணிக்கு, புத்தூர் சிவன் கோவிலில் இருந்து நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் அடியார்கள் புடைசூழ சிவன் நாம பஜனையுடன் ஊர்வலம் ஆவரங்கால் சிவன் கோவிலை வந்தடையும்.

சிவ விரதங்களில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படும் புனிதமான சிவராத்திரி விரத நாளில் - சிவநாமம் தெருவெல்லாம் ஒலிக்கும் எழுச்சி ஊர்வலத்தில் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சும், புத்தூர் - ஆவரங்கால் சிவன் கோவில் தேவஸ்தான சபையினரும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

### கலைப்பீட மாணவர்களுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல், இன்று நண்பகல் 12 மணியளவில் மாணவர் பொது அறையில் இடம்பெறவுள்ளதால், சகல இரண்டாம் வருட மாணவர்களையும் தவறாது கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு, கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

### வர்த்தக நிலையங்களை மூடுமாறு அறிவிப்பு

சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் வர்த்தக நிலையங்களை மூடுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது. சிவராத்திரி தினத்திற்கு மறுநாள் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் நோக்குடனேயே அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 07 - 1923



மறைவு 28 - 02 - 2003

கந்தரோடை

திருமதி தங்கம்மா ஆறுமுகம்

அம்மா நாங்கள் பிறந்தபோது நீங்கள் சிரித்து மகிழ்ந்தீர்கள்- ஆனால் நீங்கள் மறைந்தபோது நாங்கள் அழுது புலம்புகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்

தகவல்:-
ஆ.வரதராஜன்
கணக்குப்பகுதி,
தபால் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(625)

"றாஜ் லிங்கா ருவர்ஸ்"

சவுதி, டோகா, கட்டார் போன்ற நாடுகளில் பலதரப்பட்ட உடனடி வேலை வாய்ப்புக்கள் வழங்குவதில் "றாஜ் லங்கா ரூவர்ஸ்" நிறுவனம் முன்னணி வகிக்கிறது.

கொஸ்பிற்றல் கிளினிங்
ரெலிகொம் கிளினிங்
சுப்ப மார்கட் கிளினிங்
மேசன்
எலக்ரீசியன்
வெல்டர்
பெயின்ரர்
பிளம்பர்
மெக்கானிக்
றைவர் (வெளிநாட்டில் வாகனம் ஓடியவர்களுக்கு முன்னுரிமை)



மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு வெற்றிடம் உள்ளதால் உடன் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இங்கிருந்தே உங்கள் பயணத்தை நீங்கள் மேற்கொள்ளலாம்.

தொடர்பு:- "றாஜ் லங்கா ரூவர்ஸ்"
220A 2ம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதி வழியாக
யாழ்ப்பாணம்.

(சி-2229)

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)

18 ஆம் திகதியிலிருந்து

எங்கள் அண்ணா

(சி-2197)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந்த், சாக்ஷி நடித்த

வாஞ்சிநாதன்

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

X-MEN ii

(சி-2196)

# ஜனாதிபதி பதவியிலிருந்து விலக தயாராக இருக்கிறாராம் சந்திரிகா!



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியிலிருந்து நாளையேனும் விலகுவதற்குத் தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மகரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவிததார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - 1978 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவாத்தனவினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பில் - பாரதூரமான அதிகாரங்கள் காணப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர்ந்து ஆட்சியில் நிலைநிறுத்துவதற்கு, அந்த அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டபோதிலும், 1994 ஆம் ஆண்டு மக்கள் சக்தியின்மூலம் அந்தநிலை மாற்றப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் ஊழல்களையும், வன்முறைகளையும் தடுத்துநிறுத்துவதற்காகவே, நீண்டகாலப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜனநாயக முறையில் தேர்தல் ஒன்றை நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நிரந்தர சமாதானத்திற்காக அரசியல் தீர்வொன்றைக் காணும்பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட, சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மக்கள் ஆணை அவசியம். மக்களின் ஆணையின்றிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியாது.

சகல மக்களும் அச்சமின்றி உரிமைகளுடன் வாழ்வதற்கு, நிலையான சமாதானம் தேவைப்படுகிறது.

இதுவரைகாலமும் செயற்பட்டது போன்றல்லாது, நாட்டை ஆட்சி செய்வதற்குத் தேவையான அறிவும், அனுபவமும் கூடிய மக்கள் நலன் பேணும் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு, இந்தமுறை மக்கள் ஆணையைத் தான் கோருவதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய தகமை, தராதரம் கூடியவர்களைத் தெரிவுசெய்வதற்கு மக்கள் சரியானமுறையில் செயற்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# காத்தான்குடி கடலில் 3 இளைஞர் மூழ்கினர்

காத்தான்குடி கடற்கரையில் - விளையாடிக்கொண்டிருந்த 4 இளைஞர்கள் கடலுக்குள் சென்ற பந்தை எடுக்கச்சென்றபோது, அலையினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அலையில் அடித்துச் செல்லப்பட்ட இந்த 4 இளைஞர்களில் ஒருவர் மட்டும் உயிருடன் கரைசேர்ந்ததாகவும், ஏனைய மூவரும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இந்த இளைஞர்களைத் தேடும் முயற்சியில் காத்தான்குடி மீனவர்களும், மட்டக்களப்பு கடற்படையினரும் ஈடுபட்டிருப்பதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# திருமலையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிடவுள்ளன

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பினர் - இணைந்து போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை இந்தக் கட்சிகளின் பிரமுகர்கள் மீண்டும் சந்தித்து வேட்பாளர் பட்டியல் குறித்து விவாதிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள பட்டியலின் பிரகாரம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் நான்கு வேட்பாளர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் அணியின் சார்பில் ஒவ்வொரு வேட்பாளரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் - கொததணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபர் பதவிக்காலம் நீடிப்பு பரிந்துரையை ஆலோசனைசபை நிராகரிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திர டி.சில்வாவின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கான பரிந்துரையை ஜனாதிபதி வழங்கியபோதும், அவரின் அந்த முடிவை அரசியலமைப்பு ஆலோசனைசபை நிராகரித்துவிட்டது.

இதுதொடர்பான முடிவு கடந்த வெள்ளிக்கிழமை நடந்த அரசியலமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த முடிவை எடுக்க அரசியலமைப்பு ஆலோசனை சபைக்கு எந்தவித அதிகாரமும் இல்லையெனவும், அவர்கள் அமைச்சரவையே இது தொடர்பான முடிவை எடுக்கக் கோரலாம் எனவும் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாகவே பொலிஸ் மா அதிபராக இந்திர டி சில்வா பதவியேற்றார். இவரது பதவியேற்பு, இவரது ஓய்வுக்காலத்தை நெருங்கியதாகவே அமைந்திருந்தது.

இவர் தற்போது தனது அறுபதாவது வயதை எட்டியதால், இந்த மாதம் 19 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவேண்டியமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடன்கோரி வங்கியில் விண்ணப்பம்!

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் - சுமார் 35 பேர் தேர்தல் செலவுகளுக்காக கடன் வசதிகோரி, இலங்கை வங்கியில் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது நடைமுறைக் கணக்குகளில் மேலதிக கொடுப்பனவு வசதிகள் அல்லது கடன் வசதிகள் செய்து தருமாறு, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் இவர்கள் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களாக இருந்தவர்கள் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரே இவ்வாறு கடன் வசதிகோரி விண்ணப்பம் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த விண்ணப்பங்களூடாக, சுமார் இரண்டு இலட்சம் இலங்கை ரூபா முதல், ஒரு மில்லியன் ரூபா வரையில் நிதியுதவி கோரப்பட்டிருப்பதாகவும், இவ்வாறு விண்ணப்பித்தவர்களுள் பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களுக்குள், மூன்று தடவைகள் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட்டதால், தேர்தலுக்காகச் செலவு செய்வதற்கு நிதி ஒதுதுக்கீடுகள் இல்லாதநிலையில், இவர்கள் இவ்வாறு வங்கிக் கடன் கோரியுள்ளனர்.

இந்தநிலையில், தனது மாவட்டத்தில் பலமான போட்டி நிலவுவதாகவும், குறைந்தது மூன்று மில்லியன் ரூபாவாவது தேர்தல் பிரசாரத்துக்காகத் தனக்குத் தேவைப்படும் என்று முன்னாள் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர கொப்பலாவல தெரிவித்தார்.

இதேவேளை, தமக்கு இதைவிட இருமடங்கு தொகை நிதி தேவைப்படுவதாகவும், கேகாலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பிரேமதாச சம்பிக்க தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இடம்பெயர்ந்த வாக்காளர் விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் - எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது வாக்குகளை வேறு வாக்குச் சாவடிகளில் அளிப்பதற்கு விண்ணப்பிக்கவேண்டிய காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை, எதிர்வரும் 21 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியுமென்று, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்புப் பதிவு செய்யபட்ட பகுதிகளிலிருந்து, இடம்பெயர்ந்தவர்களின் நம்மைகருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வாக்காளர்களாகப் பதிவுசெய்யப்பட்ட பகுதிகளில், தற்போதைய சூழ்நிலை காரணமாக, குறித்த பகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு நியாயமான அச்சம் இருக்கும் பட்சத்தில், அவர்கள் வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

# செலவு மீதம் என்கிறது திணைக்களம் பெற்றோர்கள் பெரும் மனக்குழப்பம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தேர்தல் மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தல் என்பன இடமபெறவிருப்பதால், க.பொ.த உயர்தரப் பரீட்சை மே 6 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பது, பெற்றோர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை இரண்டு கட்டங்களாக க.பொ.த உயர்தரப்பரீட்சைகள் நடைபெறவிருந்தன. திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டதால், மே 6 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இந்தப் பரீட்சைகள் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏப்ரலில் பரீட்சை ஆரம்பித்திருந்தால் - தேர்தலாலும், பண்டிகைகளாலும் மாணவர்களுக்கு பெரும் இடையுறு ஏற்பட்டிருக்கும் என்று பரீட்சைத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதால், ஆறு மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டிருக்காது.

ஏப்ரலில் இரண்டு கட்டமாக பரீட்சைகளை நடத்தியிருந்தால், பெரும் செலவு ஏற்பட்டிருக்கும்.

முன்னர் ஏழு பிரிவுகளாகப் பரீட்சைகளை நடத்தவேண்டியிருந்தது. ஆனால், புதிய அட்டவணைப்படி மூன்று பிரிவுகளாக இந்தப்பரீட்சைகளை நடத்தமுடியும்.

ஒரு பிரிவுக்கு சுமார் 65 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் ரூபா செலவு ஏற்படும். பரீட்சைத் திணைக்களம் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளை நடத்துவதற்கு சுமார் எட்டு மில்லியன் ரூபாவை செலவிடுகிறது.

பரீட்சைத் திணைக்களம் செலவை மட்டுப்படுத்தியிருப்பதாகக் கூறியபோதும், பெரும்பாலான பெற்றோர்கள் - பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதால், தாம் மனக்குழப்பம் அடைந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

பரீட்சை பிற்போடப்பட்டதால், அடுத்த ஆண்டிற்கான பல்கலைக் கழக அனுமதிகள் தாமதம் அடையும் என்று இவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

ஏப்ரலில் பரீட்சை எழுதினால் மாணவர்கள் அடுத்துவரும் ஒக்ரோபர் மாதத்திலேயே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். இதனாலேயே ஓகஸ்ட் மாதம் நடைபெற்றுவந்த உயர் தரப்பரீட்சைகளை எப்ரலில் நடத்த கல்வி அமைச்சு இந்த வருடத்திற்கு முன்னர் தீர்மானித்திருந்தது.

ஆனால் 2004 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் தோற்றி, பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற தகுதிபெறும் மாணவர்கள் -அடுத்த ஆண்டிலேயே பல்கலைக்கழகம் செலலும் வாய்ப்புக்கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வட-கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஐந்து மாவட்டங்களில் போட்டி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய இருப்பதாக, அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் வி.ரி.எம்.முபளக் தெரிவித்தார்.

திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருமலை, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில், வேட்பு மனுக்களை தாக்கல்செய்ய இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரால் வடக்கு - கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு முயல் சின்னம் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கண்காணிப்பாளருக்கு தேர்தல் ஆணையாளர் அழைப்பு!

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு, சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக - உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சேனநாயக்க தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு ஆசிய தேர்தல் அதிகாரசபை, ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள் ஆகிய சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனைவிட பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களையும் இந்த முறை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கிறது.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் - மார்ச் மாதப் பிற்பகுதியில் இலங்கை வருவார்கள் என உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைகளுக்கிடையேயான மென்பந்து அரையிறுதி ஆட்டம் இன்று ஸ்ரான்லி மைதானத்தில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகளின் அரை இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 9 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ். மத்தியகல்லூரியை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆடவுள்ளது.

மேற்படி அரைஇறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி நாளை மறுநாள் நடைபெறும் இறுதிப்போட்டியில் புனித ஜோசப் வித்தியாலயத்தை எதிர்த்து ஆடும். இந்தப் போட்டியில் தோல்வியடையும் அணி யாழ்.கொ[illegible] நமசிவாய வித்தியாலயத்தை எதிர்த்து மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மோதவுள்ளது.

இறுதிப்போட்டியும், அரைஇறுதிப் போட்டியும் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.



இந்தியக் கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ். லக்ஷ்மணின் திருமணம் செகந்தரா பாத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. மணமக்களைப் படத்தில் காணலாம்.

# சோபை இழந்துபோன முதல்நாள் ஆட்டங்கள்!

(டாக்கா)

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நேற்று முன்தினம் பங்களாதேஷில் ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நான்கு போட்டிகளில் இலங்கை அணி இரண்டு விக்கெட்டுகளாலும் பாகிஸ்தான் அணி எட்டு விக்கட்டுக்களாலும், நியூசிலாந்து அணி 8 விக்கட்டுகளாலும் வெற்றி பெற்றன.



முன்னதாக இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டி போக்ராவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை சிம்பாப்வேயை துடுபெடுத்தாடப் பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டும் எடுத்தது.

இதற்கு பதிலளித்து ஆடிய இலங்கை 38.2 ஓவரில் எட்டு விக்கட்டுக்களை மட்டும் இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஆட்டநாயகனாக குலசேகரா தெரிவானார்.

இரண்டாவது போட்டி சிட்டஹொங்கில் இங்கிலாந்து - நேபாளம் அணிகளுக்கிடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நேபாளம் முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 43 ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஆட்டநாயகனாக டேவிஸ் தெரிவானார்.

மூன்றாவது போட்டி டாக்காவில் பங்களாதேஷ் - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பங்களாதேஷை துடுப்பெடுத்தாட பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 46.3 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

இதற்குப் பதிலளித்து ஆடிய நியூஸிலாந்து 49.2 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக மைக்கே தெரிவுசெய்யப்பட்டார்.

நான்காவது போட்டி பாகிஸ்தானுக்கும் - பப்புவாநியூகினியாவிற்கும் இடையில் குல்னாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் பப்புவாநியூகினியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பப்புவாநியூகினியா 17.5 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 14.5 ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக றியாஷ் அப்ரிடி தெரிவானார்.

இன்று நடைபெறும் ஆட்டங்கள், ஏ-பிரிவில் இலங்கை - கனடாவை எதிர்த்தும், பி-பிரிவில் இங்கிலாந்து உகண்டாவை எதிர்த்தும், சி-பிரிவில் பங்களாதேஷ் ஸ்கொட்லான்டை எதிர்த்தும், டி-பிரிவில் பாகிஸ்தான் அயர்லாந்தை எதிர்த்தும் மோதுகின்றன.

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி விவரம்!

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் போட்டித்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை புதன்கிழமை வரை நடைபெறும் கிரிக்கெட் போட்டிகள் விபரம் வருமாறு:

தெல்லிப்பளை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப. 2 மணிமுதல் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதும். போட்டி பிற்பகல் 2 மணிமுதல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து ஸ்ரான்லிக் கல்லூரி அணி மோதும். போட்டி பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ளது.

# யாழ்.இந்து அணியை சுருட்டிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடாசாலைகளுக்கிடையே நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சென்.பற்றிக்ஸ் அணிக்கெதிரான யாழ்.இந்துக்கல்லூரி கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இனிங்ஸால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு:

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 53 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் யாழ்.இந்து வீரன் எல்.ஏ.சர்மா 24 ஓட்டங்களைப் பெற்றார். சென். பற்றிக்ஸ் அணியின் சார்பில் லெயிட், சுவேன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சுஜீவன் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடிய யாழ்.இந்துகல்லூரி - 91 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் இனிங்ஸாலும் 10 ஓட்டங்களாலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிடம் தோல்வி அடைந்தது. இரண்டாவது இனிங்ஸில் சென்.பற்றிக்ஸ் அணியின் சார்பில் லொயிட், விநோதன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டி இரண்டாவது நாள் மதிய போசனத்திற்கு முன்பே முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# இல்ல மெய்வன்மை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அதிபர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் து.பாலசுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் செபஸ்ரியாம்பிள்ளையும் கலந்துகொள்வர்.

## விளையாட்டு

# 425 ஓட்டங்கள் குவித்து இந்திய அணி சாதனை!

## 270 ஓட்டங்களால் ஸ்கொட்லான்ட் தோல்வி

19வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டமொன்றில் இந்திய அணி 425 ஓட்டங்களைக் குவித்துச் சாதனை புரிந்ததுடன் 270 ஓட்டங்களால் ஸ்கொட்லாந்து அணியை தோற்கடித்தது.

சி பிரிவின் நேற்றைய ஆட்டம் பங்கபந்து விளையாட்டரங்கில் இந்திய - ஸ்கொட்லாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் வலது கை ஆரம்பத் துடுபாட்ட வீரர் றொபின் உதப்பாவும், இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிக்கர் தவானும் இணைந்து ஸ்கொட்லாந்து வீரர்களின் பந்துவீச்சை விளாசித்தள்ளினார்.

முதல் 15 ஓவருக்குள் இந்த வீரர்கள் இணைந்து 175 ஓட்டங்களைக் குவித்தனர். இந்திய அணிவீரர்கள் நிலைத்து நின்று அதிரடி ஆட்டம் ஆடியதால் 50 ஓவர்களில் 425 ஓட்டங்களைக் குவித்து கிரிக்கெட் வரலாற்றில் சாதனை படைத்தனர்.

றொபின் உதப்பா 79 பந்துகளில் 1 சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 97 ஓட்டங்களையும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சிக்கர் தவான் ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும், அம்பது ராயுடு 1 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 51 பந்துகளில் 53 ஓட்டங்களையும், சுரேஷ் ரானா 38 பந்துகளில் 2 சிக்ஸர் 15 பவுண்டரிகளுடன் 90 ஓட்டங்களையும் பெற்றனர்.

426 ஓட்டங்களைப் பெறவேண்டிய பாரிய இலக்குடன் ஆட்டத்தை ஆரம்பித்த ஸ்கொட்லாந்து அணி வீரர்கள் மூவர் ரன் அவுட் ஆகினர். கோர்ஸர் 62, இக்பால் 30, ரூற்றி 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

50 ஓவர்கள் முடிவில் ஸ்கொட்லாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்கள் மட்டுமே பெற்று 270 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

# எந்தச் சக்தியாலும் என்னை அடிபணிய வைக்கமுடியாது!

## வாரப் பத்திரிகைக்கு வைகோ பேட்டி



(சென்னை)

நான்வன்முறைக்கு எதிரானவன். ஈழத் தமிழர்களின் நலன்களை ஆதரிக்கின்றேன். நான் தமிழர்களுக்காகவும் அவர்களுக்காக போராடுபவர்களைப் பற்றியும் பேசுவேன்.

இதற்காக என்னை மீண்டும் சிறையில் அடைக்கலாம். நான் என் உயிரைப்பற்றி கவலைப்படவில்லை. எந்த சக்தியாலும் என்னை மிரட்டி அடிபணிய வைக்க முடியாது. எனது வலுவான தாக்குதல் தேர்தலுக்கு பிறகு வெளிவரும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வாரப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் கூறியதாவது -

என் நீண்டகால சிறை வாசத்தால் தொண்டர்களுக்கும் எனக்கும் இடைவெளி ஏற்படவில்லை. அவர்களுடன் இன்னும் நெருக்கமாகி இருக்கிறேன். சிறையில் இருந்தபடியே கட்சியை நடத்தினேன்.

கட்சி தொண்டர்களுக்கு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதினேன். உரைகளை எழுதி அனுப்பினேன்.

சிறையில் மாலை 6 மணிமுதல் காலை 6 மணிவரை அறையில் பூட்டப்பட்டிருந்தேன். இந்த 12 மணி நேரத்தில் நான் தூங்கியது 4 மணிநேரம் தான்.

மற்ற நேரங்களில் யோசித்தேன். நான் செய்த தவறுகள், என் பலவீனங்கள், வாழ்க்கையே மாயைதானா என்பது போன்ற தத்துவார்த்த சிந்தனைகள் எல்லாம் என் மனதில் வந்து போயின. கடைசியில் என் மனதை கவலை செய்தது போன்ற அனுபவம் கிடைத்தது.

அதேசமயம் என்னுள் இருக்கும் அனல் பறக்கும் பிரசார அக்கினிச் சுவாலை ஓயவில்லை.

எனது தேர்தல் பிரசாரம் வித்தியாசமாக இருக்கும். குத்துச் சண்டையில் முதலில் எதிரியை குத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். எனது எதிரியை நான் எப்படி தாக்கப் போகிறேன் என்பதை இப்போது தெரிவிக்க மாட்டேன். அரசியல் கைப்பந்து ஆட்டத்தில் பந்தை அடிப்பதற்கு எடுத்தும் தருவேன். அடிக்கவும் செய்வேன் எனத் தெரிவித்தார்.

# மதுரையில் போட்டியிடப்போவதாக சுப்பிரமணியம்சுவாமி அறிவிப்பு!

(சென்னை)

மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் ஜனநாயகக் கட்சி சார்பில் தான் போட்டியிடப் போவதாக சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளார்.

மதுரைத் தொகுதியில் முன்பு அ.தி.மு.கவின் ஆதரவுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் சுப்பிரமணியம் சுவாமி. ஆனால் அதன் பிறகு ஜெயலலிதாவின் ஆதரவை இழந்த அவர் அரசியலிலும் செல்லாக் காசாகிவிட்டார்.

இந்நிலையில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மதுரை தொகுதியில் மீண்டும் போட்டியிடப் போவதாக சுவாமி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

அ.தி.மு.கவுக்கு எங்களது ஆதரவு உண்டு. மதுரை தொகுதியில் மட்டும் நாங்கள் போட்டியிடவுள்ளோம். அதிலும் நானே போட்டியிடப்போகிறேன். மற்ற தொகுதிகளில் அ.தி.மு.கவை ஆதரிப்போம்.

சந்திரலேகா இந்தத் தேர்தலில் போட்டியிடமாட்டார். ஜெயலலிதா கேட்டுக்கொண்டால் அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்தும் பிரசாரம் செய்வேன் என்றார் சுப்பிரமணிய சுவாமி.





**நெடுந்தீவு மகாவித்தியாலய 2004 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது -**

**விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் வெற்றியீட்டிய இல்லத் தலைவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும், அருகே வித்தியாலய அதிபரையும் காணலாம். (113)**

### நீதிவானின் உத்தரவை அடுத்து

# கடற்படையின் பாதுகாப்பில் இந்திய மீன்பிடிப் படகுகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகத்தின் உத்தரவின் பேரில், கடந்த வாரம் பருத்தித்துறை உள்ளூர் மீனவர்களால் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட, ஐந்து இந்திய மீன்பிடி பிளாஸ்ரிக் படகுகளையும், கடற்படையினர் தமது பாதுகாப்பில் வைத்திருப்பதற்காகக் கடந்த சனிக்கிழமை எடுத்துச்சென்றனர்.

இந்த ஐந்து படகுகளும் பொலிகண்டி மற்றும் இன்பருட்டி கடற்கரைப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளில், சுமார் 60 படகுகள் இதுவரை காங்கேசன்துறையில் கடற்படையினரின் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த வாரம் பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து, உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களில், படகோட்டிகள் ஐந்துபேரும் யாழ். சிறைச்சாலையில், பருத்தித்துறை மாவட்ட நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை மொத்தமாக 65 இந்திய மீனவர்கள், யாழ்.சிறையில் உள்ளனர். இவர்களில் 16 பேருக்கெதிரான வழக்குகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் உள்ளது.

சட்டமா அதிபரிடமிருந்து இவர்களுக்கான அறிவுறுத்தல்கள் வரும் வரை, பொலிஸார் காத்திருப்பதாக சட்டவல்லுநர்கள் தெரிவித்தனர்.(202)

# குப்பைகொட்டும் இடமாக மாறும் உடுவில் பட்டினசபை அலுவலக வீதி

உடுவில் பட்டினசபை அலுவலகத்திற்கு அருகாகச் செல்லும் வீதி, குப்பை கூழங்களைக் கொட்டும் இடமாக மாறிவருகிறது. இதனால், அந்த வீதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளது.

மருதனார்மடம் - மானிப்பாய் வீதியிலிருந்து பிரிந்து, தெற்காகச் செல்லும் இந்த வீதி - உடுவில், இணுவில் ஆகிய கிராமங்களை ஊடறுத்துச் சென்று, பின் காங்கேசன்துறை வீதியுடன் இணைகிறது. இந்த வீதியில் இருமருங்கும் ஒரு சில குடியிருப்புக்களும், பெருமளவான தோட்டக் காணிகளும் அமைந்துள்ளன.

இந்த வீதியை அண்டியுள்ள சில தோட்டக்காணிகளின் உரிமையாளர்கள், நாட்டில் இல்லாத காரணத்தினால், அவை பற்றை மண்டியுள்ளது. இதனால், இந்தக் காணிகள் கழிவுகளை கொட்டும் இடமாக மாறிவருகிறது.

வீடுகளில் இருந்து கழிக்கப்பட்ட இரும்புப்பொருட்கள், பிளாஸ்ரிக்பொருட்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இருந்து அகற்றப்பட்ட தலைமுடிகள், இறைச்சிக்காக வெட்டப்பட்ட விலங்குகளின் கழிவுகள் எனப் பல்வேறுபட்ட கும்பைகளும் இந்த இடத்திலே தொடர்ச்சியாக கொட்டப்பட்டுவருகின்றன.

இந்த கழிவுப்பொருட்களினால், அருகிலுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக வலி. தெற்கு பிரதேச சபையிடம் பலதடவைகள் முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென, அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(94)

# போக்குவரத்திற்கு இடையூறான காவலரண்கள் அகற்றப்பட்டன

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கபட்ட பின்னர், குடாநாட்டிலுள்ள படையினர் தமது காவலரண்களில் சிலவற்றை அகற்றிவருகின்றனர்.

சுன்னாகம், மருதனார்மடம், மற்றும் வடமராட்சி பகுதிகளிலிருந்த இவ்வாறான ஐம்பதிற்கு மேற்பட்ட காவலரண்களைப் படையினர் அகற்றியுள்ளனர். காங்கேசன்துறை வீதி சுன்னாகத்தில் அமைந்திருந்த காவலரணை அகற்றிய படையினர், முகாமிக்கு உட்புறமாக அதனை மீண்டும் அமைத்துள்ளனர். அகற்றப்பட்ட காவலரண்களில் அனேகமானவை, பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. இவை போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருந்தன. இந்தக் காவலரண்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளமையால், போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலரண்கள் அகற்றப்படுவது சில சந்தர்ப்பங்களில் தேர்தல் பிரச்சாரத்திற்கான நடவடிக்கையாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. (94)

## புண்ணிய நாச்சியம்மை தினம்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை நடாத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தினமும், சபையின் ஆயுள் உறுப்பினா வி.இராமநாதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் - நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (44)

## தேர்தலுக்காக களைகட்டும் கட்சி அலுவலகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் அமைந்துள்ள, அரசியற்கட்சி அலுவலகங்கள் களைகட்ட ஆரம்பித்துள்ளன. இதுவரை காலமும் அலுவலகங்கள் வெறிச் சோடிக்காணப்பட்டன.

நாடாளுமன்றத் தேர்தல்கள் அறவிக்கப்பட்டதை அடுத்து, அலுவலகங்களில் கட்சித் தொண்டர்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. (111)

## வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது

பிரதேசசபை ஒன்றில் நடைபெற்ற விருந்து வைபவம் ஒன்றின் பின், ஊழியர்களுக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கமொன்று கைலப்பில் முடிந்தது. இதனால், ஊழியர்கள் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

யாழ். நகரை அண்டியுள்ள பிரதேசசபை ஒன்றில், வருட இறுதிக்கான விருந்துபசார வைபவம் ஒன்று, கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதனை ஒட்டி மது பானங்களும் தருவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதுபோதை தலைக்கேறிய ஊழியர்களால், சிலர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், அதனை சமரசம் செய்யச் சிலர் முயன்றபோது, அது தோல்வியில் முடிவடைய, கைகலப்பு முற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (94)

# கோம்பயன்மணல் மயானப் பகுதியில் சுத்தம்பேண மக்கள் உதவவேண்டும்

### அந்தப் பகுதி கிராமசேவையாளர் வலியுறுத்து

கோம்பயன்மணல் மயானப் பகுதியைச் சுத்தமாக வைத்திருக்க, பொதுமக்கள் அக்கறையுடன் உதவ வேணடும் என - அந்தப் பகுதி கிராம சேவையாளர் ரி.சகுந்தலாதேவி கேட்டுள்ளார்.

மானிப்பாய் வீதியூடாகச்சென்று வரும் பொதுமக்களுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில், கோம்பயன்மணல் மயானப் பகுதியில் பல்வேறு கழிவுகள் கொட்டப்படுவது குறித்துக்கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கோம்பயன்மணல் மயானப்பகுதியில் பொதுமக்கள் விசமத்தனமான முறையில் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். இதனால், அந்த வீதியூடாகச் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

வீதி ஓரங்களில் மிருகக்கழிவுகள் அதாவது, இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் தோல், எலும்பு முதலியன கொட்டப்படுவதாலும், வீட்டில்சேரும் கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டுவதாலும், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இதனைவிட, அந்தப் பகுதியில் அநாதரவான நிலையில் பொதுமக்களால் கொண்டுவந்துவிடப்படும் நாய், பூனை முதலானவை இறப்பதாலும் துர்நாற்றம் வீசுவதுடன், பெரும் சூழல் பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது.

இந்த விடயத்தில் கோம்பயன் மணல் மயான நிர்வாகத்தினரோ, யாழ்.மாநகரசபையினரோ அக்கறையுடன் செயற்படுவதில்லை என்பது வேதனையான ஓர் விடயம். எனினும் எமது பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும், அவர்களது ஆலோசனையுடனும் கடந்த வருடம் ஓர் குழுவொன்று அமைக்கப்பட்டது. தற்போது அந்தக் குழுவின் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டிருப்பதால், மீண்டும் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலை உருவாகி வருகின்றது.

இந்த விடயத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்காதுவிட்டால், எம்மால் எதுவும் செய்யமுடியாது. வீதியிலும், வீதி ஓரமாகவும் பொதுமக்கள் கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்தவேண்டும். வீடுகளில் வெட்டிப்புதைப்பதை விடுத்து, மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடியதாக, மனச்சாட்சியற்ற முறையில் இவ்வாறாக நடந்துகொள்வது மனிதாபிமானத்திற்கு புறம்பானது.

விரைவில் மீண்டும் இந்தப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபடும் பொருட்டு, குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இதன்மூலம் இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் பிடிக்கப்பட்டு, நீதிமன்றின் முன் நிறுத்தப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (ப,44)

# பஸ் தரிப்பிடம் இன்றி பயணிகள் பெரும் அவதி

மருதனார்மடம் சந்திக்கு அருகில் இருந்த பஸ் நிலையம் அகற்றப்பட்டமையினால், பயணிகள்பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவித்தே, இந்த பஸ் தரிப்பிடம் அகற்றப்பட்டுள்ளது.

இது அகற்றப்பட்டு நீண்ட நாட்களாகியும், வேறு ஒரு வசதியான இடத்தில் புதிய பஸ்தரிப்பு நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை. இந்த பஸ் தரிப்பிடத்தை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகள், இராமநாதன் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் பாவித்து வந்தனர்.

தற்போது இந்தப் பகுதியில் பஸ்தரிப்பு நிலையங்கள் எவையும் இல்லாததனால், பொதுமக்களில் ஒரு பகுதியினர் மருதனார்மடம் சந்திப்பகுதிக்கு அருகிலுள்ள வைரவர் ஆலயத்திற்கு அருகில் பஸ்சிற்காக காத்திருப்பதை காணமுடிகிறது.

வேறு சிலர் பஸ்தரிப்பிடமிருந்த பழைய இடத்திலேயே காத்திருக்கின்றனர். இதனால், பஸ் சாரதிகளுக்கு பஸ்ஸை அடிக்கடி இடைநிறுத்துவது இடையூறாகவுள்ளது. அத்துடன், வைரவர் கோவிலை அண்டிய வீதிப்பகுதிகளில் நடைபாதை வியாபாரங்களும் நடைபெற்று வருவதனால, பஸ்ஸை ஓரமாக நிறுத்த முடியாதுள்ளது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (94)

## மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

மந்துவில் கோயிலாமனை பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்களில் விபத்தில் இருவர் காயமடைந்தனர். வரதன் சஞ்சீவன் (வயது 33) என்பவர் தலையிலும், மகேந்திரன் பிரதீபன் (வயது 27) என்பவர் கையிலும் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (36)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : கோ.கீர்த்தனன்
முகவரி : புதுக்குடியிருப்பு.

இரண்டாவது அகவையில்



பெயர் : அ.சியானா பிரிசில்டா
முகவரி : உயரப்புலம், ஆனைக்கோட்டை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------
பெற்றோர் ஒப்பம்




## டைனோசர் எச்சங்கள்

டைனோசர் எனப்படும் பருத்த உடலமைப்பைக் கொண்ட உயிரினம், பூமியிலிருந்து முற்றாகவே அழிந்துவிட்டது. அவற்றின் எலும்புக்கூடுகளை ஆராய வாளர்கள் அகழ்ந்தெடுத்துள்ளனர்.



இந்த எலும்புக்கூடுகளைத் தொகுத்து வரிசைப்படுத்திய போது, மேலும் 500 வகையான டைனோசர்கள் வாழ்ந்திருப்பதை விஞ்ஞானிகள் அவதானித்தனர்.

வொஷிங்ரன் பல்கலைக் கழகத்தை சேர்ந்த விஞ்ஞானி யூலியா கீத்கொட் புள்ளிவிபரவியல் பகுப்பில் இதுவரை கணடெடுக்கப்படாத டைனோசர் எலும்புக்கூடுகள் 500 இற்கும் மேலாக இருக்கலாம் எனத் தெரிவித்திருந்தனர். முன்னர் இந்த விலங்கின் பரிணாம வளர்ச்சியையும், எலும்புக்கூட்டின் வயதையும் கணிப்பதன்மூலம், எத்தனை வகையான டைனோசர்கள் வாழ்ந்திருக்கின்றன என்பதைக் கணிக்கமுடிந்தது.

கடந்த 150 வருடங்களாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்ட எலும்புக்கூடுகளை தொகுப்பதன்மூலம் இந்த எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாக ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## புதிய நட்சத்திரங்கள்



இரு நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டபோது புதிய நட்சத்திரம் ஒன்று உருவாகியது. இவ்வாறு பல நட்சத்திரங்கள் சோடிகளாக இணைந்து, புதிய நட்சத்திரத் தொகுதி (GALAXY) உருவாகியபோது. நட்சத்திரத் தொகுதிகள் பால்வெளிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு இணைந்த நட்சத்திரங்கள் வழமைக்குமாறாக நடந்துகொள்கின்றன. M 64 என இவற்றை அழைக்கிறார்கள். இந்த வகையான நடசத்திரத் தொகுதியின் பிரகாசமான மையப்பகுதியைச் சுற்றி, கரிய நிறத் தூசித்துகள்கள் காணப்படுகின்றன.

கபில் அண்டவெளி தொலைநோக்கி ஊடாக இவற்றின் செயற்பாடுகளை விஞ்ஞானிகள் அவதானித்துள்ளனர்.

இந்த வகையான நட்சத்திரங்களின் வாயுக்கள் ஒரு புறமாகவும், வெளிப்பக்கத்தில் மறுபுறமாகவும் வாயுக்கள் அசைவதை அவதானித்துள்ளனர். இவை வான சாஷ்திரிகளிடையே (ASTRNOMERS) மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாகக் காணப்படுகிறது. ஏனெனில், இவற்றை சாதாரண தொலைநோக்கிக் கருவிகளூடாகவும் அவதானிக்கமுடியும். இவை 18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் வான சாஷ்திரியான பெசியர் என்பவரால் முதல் முதலில் அவதானிக்கப்பட்டது.

## கட்டுப்பாடாகும் பிறப்பு வீதம்

அடுத்த பத்தாண்டுகளில் உலகிலுள்ள எண்ணெய். இயற்கைவாயு ஆகியவற்றின் வளங்கள் அரிதாகிக்கொண்டு செல்ல நேரிடலாம். இதனால், பிறப்புவீதமும் குறைந்துசெல்லலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.



பொருளாதாரப் பிரச்சினைகள், இளவயதில் திருமணம் செய்துகொள்ளும் எண்ணத்தைக் குறைத்துவிடலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் அமைந்துள்ள விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமைப்பினரால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றுகூடலில் - மானிடவியலாளர்கள் (Anthoropologist) இந்தக் கருத்தை தெரிவித்துள்ளனர். மேலும் மக்கள் தொகை அதிகரிக்கும் உலகில், சக்தி வழங்குபவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு சக்தி வளங்கள் அவசியமாகும். எண்ணெய் வளங்கள் நூற்றுக்கதிகமாக தொழில் உற்பத்திகளுக்கும், விவசாய உற்பத்திகளுக்கும் அவசியமாகும். இயற்கை உரங்கள், கிருமிநாசினிகள், பிளாஸ்ரிக் பொருட்கள் எல்லாம் எண்ணெய்யை மூலவளமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த வகையான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு, எண்ணெய் வளத்தைத் தவிர வேறுமுறையில் உற்பத்தி செய்வது கடினமானது எனவும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார முன்னேற்றத்திற்குச் சாத்தியங்கள் உள்ளன என்ற எண்ணம், தமது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்திற்கு வலுவூட்டுவதாகவும் தெரிவித்தனர்.

## காசநோய்க்கு புது மருந்து

காச நோயினால் ஒவ்வொரு ஆண்டும் 2 மில்லியன் மக்கள் மரணமடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அன்ரி பயோரிக் (ANTI BIOTIC) எனப்படும் காச நோய்க்கான மருந்துகளுக்கெதிராக, கிருமிகள் தமது வலுவை அதிகரித்துக் கொள்கின்றன. இதனால் புதிய வகையான எதிர்ப்பு மருந்துகளை உருவாக்க வேணடியுள்ளது. மேலும் 15 செக்கனுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இந்த நோயினால், மரணமடைந்து வருகின்றனர். இதனால், சக்திமிக்க மருந்துவகைகளை உருவாக்கவேண்டியுள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் குறைந்து செல்வதை உலக சுகாதார ஸ்தாபனம் அவதானித்துள்ளது. பாலியல் நோய்களினால் (HIV/AIDS) பாதிக்கப்படடவர்கள் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, மீண்டும் இந்தநோயின் தாக்கத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.



வளர்ந்துவரும் நாடுகளில் - குறிப்பாக 15 வயதிற்கும் 44 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களை அதிகளவில் பாதித்துள்ளது.

காசநோய்க் கிருமிகள் மருந்திற்கெதிரான தாக்குதிறனை, பல மடங்கு அதிகரித்துள்ளதால், சக்தி வாய்ந்த எதிர்ப்பு மருந்துகளை உருவாக்கவேண்டியுள்ளது.

வைத்தியர்கள் இந்த நோய்க்கெதிராக மருந்துகளை அதிகளவில் (OVER DOSE) சிபார்சுசெய்யும் போது, காசநோய்க் கிருமிகளை எதிர்த்து போராடும் திறனையும் தம்மிடையே அதிகரித்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பிரித்தானியாவில் உலகில் பிரசித்திபெற்ற, கணனி தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் தலைவர் காசநோய் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு - நிறுவனமொன்றை உருவாக்க 83 மில்லியன் பவுண்ட்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

## நீண்ட பயணம் செய்யும் புறாக்கள்

நீண்ட தூரத்திற்கு பிரயாணங்களை மேற்கொள்ளும் பறவைகள், தமது இருப்பிடங்களுக்கு திரும்பிவருவதற்கு, காந்தப் புலன்களின் திசைகளையும், சூரியக் கதிர்வீச்சையும், திசையறிகருவிகளாகப் பாவித்துவந்துள்ளன.

ஆனால், புறாக்கள் மனிதனைப் போன்று பெருந்தெருக்களையும், ரயில்



பாதைகளையும் பாவிப்பதாகப் பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

10 ஆண்டுகள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகளில் - பாதைகளின் வளைவுக்கேற்ப தமது பிரயாணத் திசைகளையும் மாற்றிக்கொள்வதாகத் தற்போது விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

செயற்கைக்கோள்கள்மூலம், திசையறியும் (GLOBAL POSITIONING SYSTEM) நவீன முறைகளைக்கொண்டு அவை செல்லும் பாதையை மிகவும் துல்லியமாக அறிந்துள்ளனர். அவை சென்ற பாதையை வரைபடம்மூலம் குறித்துக்கொண்டனர். 200 முதல் 300 அடி உயரத்தில் புறாக்கள் பறந்து சென்றபோது, வரைபடங்களுக்கும் நிலத்தில் காணப்பட்ட தெருக்களுக்கும் இடையே ஒன்றுமை காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேநேரத்தில் தெருக்களோ, ரயில்பாதைகளோ காணப்படாத பிரதேசங்களில், சூரியனை மையமாகக்கொண்டு பறந்ததாகவும் தெரிவித்தனர்.

மேலும் புறாக்கள் நேரிய பாதைகளிலேயே பறந்ததாகத் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் சிக்கல் இல்லாமல் தமது இருப்பிடங்களை அடைவதற்கு முயற்சித்ததாகவும் அறிவித்துள்ளனர்.

## கிரக ஆராய்ச்சி



நாம் வாழ்கின்ற சூரிய குடும்பத்திற்கு (Solarsystem) வெளியில் பிரதான வாயு, கரியமிலவாயு ஆகியனவற்றால் உருவான ஒரு கிரகம் காணப்படுவதாக அணடவெளியில் சுற்றிவரும் ஹபிள் தொலை நோக்கியின்மூலம் அறிய முடிந்துள்ளது. கிரகம் 150 ஒளியாண்டுக்கு வெளியில் சஞ்சாித்துவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரகணங்கள் ஏற்படும்போது இந்தக் கிரகம் தனது பாதையிலிருந்து, பூமியிலிருந்து அவதானிக்கக்கூடிய தூரத்திற்கு அண்மிப்பதாக அதிலிருந்து ஒளிக்கற்றையை ஆராய்ந்ததன்மூலம் அந்தக் கிரகத்தின் இரசாயன அமைப்பை அறியமுடிந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிரகத்தினை விஞ்ஞானிகள் மேலும் ஆராயவுள்ளனர். இதன்மூலம் இந்தக் கிரகத்தில் நீராவி (water vapour) காட்டுகின்றனவா என்பதையும் ஆராயவுள்ளனர்.

# கண்ணாடி ஈரல்



பிரித்தானியாவில் லீட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செயற்கை நுரையீரலை உருவாக்குவதில் வெற்றியடைந்துள்ளனர். இதன்மூலம், நுரையீரலின் தொழிற்பாட்டை அறிந்துகொள்ள முற்பட்டுள்ளனர்.

ஈரல் நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, இந்தச் செயற்கை நுரையீரல் பேருதவியாக அமையலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

மனித உடலுறுப்புக்களில் நுரையீரலின் தொழிற்பாட்டை இதுவரை முற்றாக அறிந்துகொள்ளப்படவில்லை என, லீட் பல்கலைக்கழக விஞ்ஞானி டொக்டர் பீற்றர் வாக்கர் தெரிவித்தார். நுரையீரல் தொடர்பாக இதுவரை அறிந்துகொள்ளாத உண்மைகளை அறிந்துகொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

சிறுநீரக (**Kidney**) நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தத்திலிருந்து, சிறுநீரை அகற்றுவதற்கு டயலைஸ்சிஸ் (**Dialysis**) எனப்படும் கருவியைப் பாவிப்பதுபோன்று, இந்தக் கருவியும் இரத்தத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டை அகற்றுவதற்குப் பாவிக்கமுடியும்.

மனித உடலில் நாளம், நாடி என இரு இரத்தக்குழாய்களிலிருந்து வெளியேறும் இரத்தம் ஒன்றுகலக்குமிடம் நுரையீரல் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கையில் நுரையீரல் அமைந்திருப்பதுபோன்று, இந்த செயற்கை நுரையீரலும் அமைக்கப்பட்டுள்ளது. எண்கோண வடிவில் (**Hexagonal**) மிகச்சிறிய மயிர்துளைக்குழாய்கள் பாதிக்கப்பட்டுள்ள நுரையீரலுக்குள் அதன் நடுப்பகுதிவரை கண்ணாடிக்குழாய்கள் செலுத்தப்பட்டுள்ளது.

இவை பல அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடிக் குழாய்கள், நுரையீரலின் கலன்கள் அதன் மேல்புறத்தில் காணப்படுவதால், இரத்தத்தில் காணப்படும் கழிவுப்பொருட்களை உறிஞ்சி எடுத்துவிடுகிறது. இதன்மூலம் தூய்மையான இரத்தம் வெளியேறுகிறது.

# திரை விமர்சனம்



சீரியசான கதைகளைத் தருவதில் பெயர்போன தங்கர்பச்சனிடமிருந்து கிடைத்த அற்புதமான கதையிது. ஒரு தனலட்சுமியை

## தென்றல்



பள்ளி மாணவன் காதலிக்கிறான். அதே போல் வீட்டின் அருகில் இருக்கும் எழுத்தாளரை பள்ளி வயதிலிருந்தே மனதில் வைத்துப் பூஜிக்கின்ற தாமரைச்செல்வி. எல்லாமே பிஞ்சுக்கதைதான். நலங்கிள்ளி என்ற பெயரில் மீசை முறுக்கிடும் எழுத்தாளராகி பார்த் தபன் கோபக்காரர். அத்துடன், மது மாது பழக்கம் வேறு. சந்தர்ப்பவசத்தால் தாமரைச்செல்வியை பார்த்தீபன் கர்ப்பமாக்கிவிடுகிறார். ஆனால், கதைக்கு சம்பந்தமில்லாத அழுமூஞ்சி பாத்திரங்கள் நிறைய வந்து படத்தினை பழுதாக்குகின்றன. காவிரி நீர் போராட்டம் தமிழில் அர்ச்சனை என்று அரசியலையும், பச்சான் புகுத்தியிருக்கின்றார். எடிட்டிங்கோ அல்லது பின்னணி இசையோ இல்லை என்பது சாதாரணமான ரசிகனுடைய ஏக்கம். தமிழ் சினிமாவால் கையாளப்படும் அத்தனை கதைகளும், ஆண்களை மையமாக வைத்தே செயல்படும்வேளையில், தைரியமாய் ஒரு பெண்ணின் உண்மையான உணர்வுகளை தன் ஸ்டைலில் பதிவு செய்திருக்கின்றார். தங்கர் பச்சான் தென்றல் உண்மையாகவே தென்றல்தான்.

- **PNS.**

# பசுபிக்கடல் சிங்கங்கள்



வடகடல் பசுபிக் சமுத்திரத்தில் கடல் சிங்கமும், கடல் வாழ் பாலூட்டிகளும் வேகமாகக் குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். தற்போது இந்த இனங்கள் கடலில் அருகிவருவதற்கான காரணங்களைத் தெரிவித்துள்ளனர்.

1970 ஆம் ஆண்டுகளில் அவற்றின் எண்ணிக்கை 80 வீதமாகக் குறைந்துள்ளது.

வட பசுபிக் பல்கலைக்கழகத்தில் நீர்வாழ் பாலூட்டிகள் மாநாடொன்று நடத்தப்பட்டது. இந்த விலங்குகளின் வீழ்ச்சி தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது. இந்த விலங்குகள் கொழுப்புக் குறைந்த மீன்வகைகளைத் தற்போது உண்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடல்சிங்கம் மிகவும் குளிர்ந்த பிரதேசத்தில் உயிர்வாழ்வதால், உடலில் அதிக கொழுப்பை (**BLUBBER**) தேக்கிவைத்துக்கொள்ளவேண்டியுள்ளது. இந்த இனங்கள் தமது உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொண்டதனால், நண்டு, இறால், சல்மன் ஆகிய கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. மேலும், கடல் சிங்கங்கள் - ஜப்பான், ரஷ்யா, அலாஸ்கா, பிரிட்டிஷ், கொலம்பியா, கலிபோர்னியா ஆகிய குளிர்ப்பிரதேசங்களில் காணப்படுகின்றன. இந்த இனங்களின் உடம்பில் கொழுப்புப்படை குறைந்து வருவதால், விரைவில் மரணமடைந்துவிடுகின்றன. தமது உணவுப் பழக்கத்தை என்னநோக்கத்திற்காக மாற்றிக் கொண்டன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்வதற்கு முற்பட்டபோது, பல உண்மைகளை அறிந்துகொண்டனர். கடல்சிங்கங்கள் அதிகரித்த கொழுப்புத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக கேறிங் (**HERRING**) எனப்படும் கொழுப்புமிக்க மீன்களை விரும்பிச் சாப்பிடுகின்றன. இவை ரின்களில் அடைப்பதற்கு ஏற்ற ஒருவகை மீனாகும். இவை தற்போது அருகிவருவதால், இவற்றைத் தேடி கடலின் அடிப்பாகத்திற்குச் செல்லவேண்டியுள்ளது.

கடல்சிங்கங்களின் உடலில் கொழுப்புக் குறைந்து செல்வதால், அதிக ஆழத்திற்குச் செல்வதற்கு தேவையான ஒட்சிசனை அவை தமது உடலில் சேமிப்பதும் குறைந்துள்ளதாகவும், இதனால் தமக்கு க் கிடைக்கும் குறைவான சத்துள்ள மீன்வகைகளைச் சாப்பிட நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாரம் ஒரு யோகாசனம்

## உறக்கம்



உறங்கும்போது ஒரு ஒழுங்கு இருக்கவேண்டும். ஏதாவது ஒரு பக்கம் சரிந்து உறங்கவேண்டும். தலைக்கு உயர்ந்த தலையணை உபயோகிக்கக் கூடாது. தலைப்பகுதி உயரமாக இருப்பதனால், மூளையிலிருந்து இரத்தம் கீழ் இறங்கும். இதனால், ஞாபகசக்தி குறையும். அதிகமான கனவுகள்வரும். உறக்கம் கலையும். தலைப்பகுதிக்கு சிறிய தலையணை பாவிக்கலாம் அல்லது தலையணை இல்லாமல் உறங்குவது மிகச்சிறந்தது. காற்றோட்டமுள்ள இளக்கமான உடை அணிந்திருக்கவேண்டும். சீராகச் சுவாசம் நடைபெறும். குப்புறப்படுத்து உறங்கக்கூடாது. மார்புப் பக்கம்கூடிய அமுக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. இரத்த அழுத்தம், சுவாசநிலையில் தடங்கல் என்பன உண்டாகும். மல்லாந்து உறங்கினால், கீழ்ப்பக்க சுவாசம் நடைபெறாது. மேல்பக்கம் அதிகமாக விரிவடையும். சுருண்டு உறங்கக்கூடாது இது மிக ஆபத்தானது. முள்ளந்தண்டுகளில் பிடிப்பு ஏற்படும். உடல்நிலையில் பல கோளாறுகளும் ஏற்படும். தலைவைத்து உறங்கும் திசை தெற்குப்பக்கமாக இருத்தல் மிகச்சிறந்தது. தெற்கே தலைவைத்து உறங்கினால் ஞாபகசக்தி அதிகமாகும். மந்தநிலை நீங்கும். மேற்குத் திசையில் தலைவைத்து உறங்கினால் மந்தநிலை உருவாகும். அறிவாற்றல் குன்றும். வடக்குத் திசையில் தலைவைத்து உறங்கக்கூடாது. மிக ஆபத்து. பூமியின் காந்த ஈர்ப்பு சக்தி உண்டு. ஈர்ப்பு சக்தியால் மூளையின் செயற்திறன் நரம்பு மண்டலங்களை அதிர்வுக்கு உள்ளாகும். சிறுகாலம் வடக்குத் திசையில் தலைவைத்து உறங்கினால், மூளைப்பைத்தியம் உருவாகும். ஞாபகசக்தி செயற்திறன் என்பன அழிந்துபோகும். தொடர்ச்சியாக வடக்குத்திசையில் தலைவைத்து உறங்கினால், இருதயம், சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகும். உறங்கவேண்டிய உறக்கத்தை கெடுத்துவிட்டு நித்திரை மாத்திரை பாவிக்கக்கூடாது. இருதயம், சீறுநீரகம் என்பவற்றை பாதிப்புக்குள்ளாக்கும். அதிகமாக உட்கொண்டால், உயிர்பிரிந்துவிடும் ஆபத்து ஏற்படும். குறைந்தது 6 மணித்தியாலமாவது உறங்கவேண்டும். மங்கல் வெளிச்சத்தில் படிக்கக்கூடாது, வேலை செய்யக் கூடாது. அதிகமாக நித்திரை விழித்து வேலை செய்யக்கூடாது. அதிகமாகத் தொலைக்காட்சியை நித்திரை விழித்துப்பார்க்கக்கூடாது. கண்பார்வை குறையும், உறக்கம் கெடும், உடல்நிலையில் பல கோளாறுகள் உருவாகும், மதுபானம், புகைத்தல் ஆகியன உறக்கத்தை கெடுக்கும். கருத்தடை மாத்திரை பாவிக்கக்கூடாது. மிக ஆபத்தானது உறக்கத்தைக் கெடுக்கும். இருதயம் சிறுநீரகம் பாதிப்பிற்குள்ளாகும். உறங்கச் செல்லும்போது, அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். சீரான உறக்கம்வரும் உறக்கம் விட்டு எழுந்தவுடன் தண்ணீர் அதிகமாக குடிக்கவேண்டும்.

### நன்மைகள்

சீரான உறக்கம் ஞாபகசக்தியை அதிகமாக்கும். தேகப் பொலிவை உண்டாக்கும். இளமையைக் காக்கும். தேகத்தில் அதிகமான ஆரோக்கியம் உண்டாகும். ஆயுளை அதிகரிக்கும். (முற்றும்)

**தருபவர் - மா.மகாநேசன்.**

# கருக்கட்டலும் எலியும்

சில உயிரினங்கள் வேகமாக பூமியிலிருந்து மறைந்துகொண்டுசெல்கின்றன. மேலும், இந்த இனங்கள் முழுமையான வளர்ச்சி அடைவதற்கு முன்னரே இறந்து விடுகின்றன. இதனால், செயற்கை முறையில் கருக்கட்டல் (**FERTLIZATION**) செய்வதற்கும் முடிவதில்லை. புதியமுறையில் இந்த இனங்களை உற்பத்தி செய்வதற்கு முயற்சிகளை அமெரிக்க விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



வளர்ந்த உயிரினம் ஒன்றில் வேற்று உயிரினத்தின் உறுப்புக்களைப் பொருத்துவதற்கு முற்படும்போது, மாற்று உறுப்புக்களை ஏற்காத நிலையும், பல நேரங்களில் தோன்றுகின்றன. எதிர்ப்புசக்திமிக்க ஓமோன்களை உறுப்புக்களை ஏற்கும் உயிரினம் தோற்றுவிப்பதே முக்கிய காரணமாகும். இதனால், அமெரிக்க விஞ்ஞானிகள் குரங்கிலிருந்து எடுக்கப்பட்ட விந்துக் கலங்களை (**TESTICUKLAR TISSUE**) எலியின் தோலில் இணைப்பதன்மூலம் கருக்கட்டச் செய்துள்ளனர்.

இந்த எலிகள் குறைவான எதிர்ப்புச் சக்தியை கொண்டிருந்தன. 7 மாதங்களின்பின் கருக்கட்டலுக்கு ஏற்ற விந்துகள் (**SPERM**) உருவாகியிருந்ததை அவதானித்துள்ளனர். இதன்மூலம் அழிந்துவரும் இனம் ஒன்றின் சந்ததியை விருத்திசெய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆண்களின் உபயோகத்திற்கென உருவாக்கப்படும் கருத்தடைச் சாதனங்களின் குறைபாடுகளையும் அகற்றி விடமுடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## உள்ளதைச் சொல்வோம் - யதார்த்தன்

# பிரதேச சபையின் எல்லைப் பிரச்சினையால் பாதிக்கப்படும் இங்களப்பாய் மக்கள்

**மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வந்துள்ளது. மக்களிடம் வாக்குக் கேட்டுச் செல்லும் வேட்பாளர்கள் தமது கிராம மட்டத் தேர்தல் விஞ்ஞாபனத்திலே வீதிகளையும் மின்சாரத்தையும் நிச்சயமாகத் தவறவிட மாட்டார்கள். ஆனால், தேர்தல் முடிந்ததும்...**

அடிக்கடி நடைபெறும் பொதுத் தேர்தல்களில் வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதன் மூலமாக சில வீதிகள் புனரமைக்கப்பட்டமையும், ஒரு சில முன்பள்ளிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டமையுந்தான் சாதாரண பொதுமக்களால் நேரடியாக அனுபவிக்க முடிந்த நன்மைகள்.

ஆனால், இந்த அற்ப சலுகைகள் நன்மைகளைக்கூட அனுபவிக்க முடியாத நிலையிலே சில பொதுமக்கள் இருப்பதும் வேதனைக்குரிய விடயம். இந்த நிலையைக் குடாநாட்டின் பல கிராமப் புறங்களிலும் காணமுடிகிறது. பொதுவாகப் பிரதேச சபைகளினால் நிறைவேற்றப்படவேண்டிய வேலைத் திட்டங்களே அரைகுறையாகவோ அல்லது முற்றாகவோ கைவிடப்பட்டுள்ளது. இதுவிடயம் தொடர்பாக அவ்வப் பகுதி பொதுமக்களும், பொது அமைப்புகளும் உரிய பிரதேச சபைகளுக்கு எழுத்துமூலமாகப் பலமுறை கோரிக்கைகள் விடுத்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் பொதுமக்கள் குறைபட்டுக்கொண்டனர்.

இதிலும் மிகவும் வேதனையான சில சம்பவங்களும் இவ்வாறான பகுதிகளிலே நடைபெற்றுள்ளன. அதாவது, வீதிப் புனரமைப்புக்கென கற்களைப் பறித்துவிட்டு பின்னர் ஏதோ காரணங்களைச் சொல்லி அவற்றை மீள அள்ளிச் சென்றுள்ளனர் சில பிரதேசசபையினர். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதொரு நிகழ்வாகும்.

இதற்குக் காரணமாக எல்லைப் பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த இடம் எமது பிரதேச சபைக்குரியதல்ல. இது அந்தப் பிரதேச சபைக்குரியது. ஒப்பந்தகாரர்களும், தொழிலாளிகளும் எல்லை புரியாமல் தவறுதலாகக் கல்லைப் பறித்துவிட்டார்கள் எனச் சொல்லப்பட்டு அந்த வேலைகள் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றன.

கல்லை அள்ளிச்சென்ற பிரதேச சபை, காட்டிச் சென்ற மற்றைய பிரதேச சபையிடம் இது தொடர்பாகச் சென்று கேட்டால், அவர்கள் இன்னொரு பிரதேச சபையிடம் பொறுப்பைச் செலுத்தி விடுகிறார்கள். இது கேட்பதற்கு வியப்பாக இருந்தாலும், இப்படியான சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றுள்ளமையே இந்தப் பந்தியை எழுதத் தூண்டியுள்ளது.

இணுவில் பகுதியில் அங்களப்பாய் எனும் ஒருபகுதி உண்டு. இந்தப் பகுதி - வலிதெற்கு, வலி கிழக்கு, நல்லூர் ஆகிய பிரதேச சபைகளின் எல்லைகளை மருவியபடி அமைந்துள்ளது. இதுதான் இன்று இந்த மக்களுக்கு விரோதமாக அமைந்துள்ளது. இதனுடன் இணைந்துள்ள ஏனைய சிறு பகுதியான காரைக்கால் பிரதேசத்தின் அரைப் பகுதியும் இதனால் பாதிப்புக்குள்ளானது.

இந்தப் பகுதிகளை மருவியபடி புகையிரதப் பாதை செல்கின்றது. இந்தப் புகையிரதப் பாதைக்கு அருகாக சுமார் இருபது அடி அகலமான வீதியொன்று மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகி நீண்டுசென்று யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியைத் தாண்டிச் செல்கின்றது. இதன் காரணமாக இந்த வீதி ஏராளமானோரின் பாவனைக்கு உட்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள், திருநெல்வேலி சந்தைக்குச் செல்லும் விவசாயிகள், நகருக்குச் செல்லும் பொதுமக்கள் எனப் பல தரப்பட்டவர்களும் இந்த வீதியை உபயோகப்படுத்துகின்றனர்.

இந்தவிடங்களை அடைவதற்கு இந்தப் பாதை மிகவும் அண்மித்ததாக இருப்பதே இதற்கான காரணமாகும். ஆனால், இந்தப் பாதையின் ஒரு பகுதியின் நிலையோ வார்த்தைகளில் வர்ணிக்கமுடியாத அளவிற்கு மோசமாகவுள்ளது. குண்டுகளையும் குழிகளையும் தாங்கி நிற்கும் இந்த வீதியை அரச தரப்பு செப்பனிட மறுத்தமையினாலோ அல்லது மறந்தமையினாலோ இந்தப் பகுதி மக்கள் தம்மால் இயன்றளவுக்கு அந்தப் பணியைச் செய்ய முனைந்துள்ளார்கள். அவர்களது முயற்சி சிறந்ததாயினும், உரிய வசதிகளின்றி வெறும் மனித வலுவை மட்டும் உபயோகித்துச் செய்யப்பட்டமையினால், வீதிப் பாவனையாளர்களுக்கு இந்த வீதி இடையூறாக உள்ளது.

வீடுகள், கட்டடங்கள் திருத்தும்போது உள்ளடக்கப்படும் கற்களையும், இடிபாட்டு கட்டட துகள்களையும் வீதியில் உள்ள குழிகளில் கொட்டி அவற்றை நிரப்ப முயல்கின்றனர் இம் மக்கள். ஆனால், அழுத்திகள் எவையும் உபயோகித்து செபபனிடப்படாமையால், அந்தக் கற்களும் நடந்து செல்வோருக்கும், வாகனங்களில் பயணிப்பவர்களுக்கும் வில்லனாக முளைத்துநிற்கின்றன.

அதிலும் மக்கள் தாம் நினைக்கும் நேரத்தில் குழிகளை மூடிவருவதால் வீதி மிகவும் மோசமாகச் சேதமுற்றுள்ளது. எல்லோரும் இணைந்து செயற்படமுடியாத காலச் சூழ்நிலையே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

குறிப்பாக இணுவில் அரங்கன் சுவாமிகளது இருப்பிடத்திற்கு அருகாகச் செல்லும் புகையிரதப் பாதை கடவையிலிருந்து, வடக்கே-பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மதுபான விற்பனை நிலையம் வரையும் கிழக்கே சென்று பின் வடக்கே உருப்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் வரையும் தெற்கே காரைக்கால் சிவன்கோவில் வரையுமுள்ள வீதிப் பகுதிகளே மிகமிக மோசமாகச் சேதமடைந்த நிலையில உள்ளன. இந்த நிலைக்குக் காரணம் இந்த வீதிகள் ஊடறுத்துச் செல்லும் பகுதிகள் எந்தப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்டமை என்ற சந்தேகம்தான். அதனால்தான், பறித்த கல்லை நல்லூர் பிரதேச சபை மீண்டும் ஏற்றிச் சென்றது. பின்னர் வலி.தெற்குப் பிரதேச சபையிடம் பொதுமக்கள் செல்ல அது வலி.கிழக்குப் பிரதேச சபையைக் காட்டிவிட்டது.

**அடிக்கடி நடைபெறும் பொதுத் தேர்தல்களில் வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதன் மூலமாக சில வீதிகள் புனரமைக்கப்பட்டமையும், ஒரு சில முன்பள்ளிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டமையுந்தான் சாதாரண பொதுமக்களால் நேரடியாக அனுபவிக்க முடிந்த நன்மைகள்.**

இதிலும் முக்கியமான விடயம் இந்த மூன்று பிரதேச சபைகளும் ஈ.பி.டி.பியினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அவர்களுடைய ஆளுகைக் காலத்திலேதான் இந்த அநியாயத்துக்கு இம் மக்கள் முகங்கொடுத்து அதன் பலனை இன்றுவரை அனுபவித்து வருகின்றார்கள். அது என்றுவரை தொடருமோ என்பதுதான் இன்று அவர்கள் அனைவருக்கும் முன்னேயுள்ள வினாவாகும்.

இந்தப் பகுதிப் பொதுமக்களுடன் கலந்துரையாடியபோது, அவர்கள் சொன்னார்கள் - எனக்குரியது உனக்குரியது என தட்டிக்கழிக்காது மூன்று பிரதேச சபைகளும் இணைந்தே இந்த வீதியைப் புனரமைக்கலாம்தானே" என்று. அவர்கள் எதிர்பார்ப்பிலும் நியாயம் இல்லாமல் இல்லை. எல்லாம் அரசின் பணம் தானே என அவர்கள் கருதுகிறார்கள். இதனைப் பிரதேச சபைச் செயலாளர்கள் கவனத்திற்கொண்டு செயற்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வந்துள்ளது. மக்களிடம் வாக்குக் கேட்டுச் செல்லும் வேட்பாளர்கள் தமது கிராம மட்டத் தேர்தல் விஞ்ஞாபனத்திலே வீதிகளையும் மின்சாரத்தையும் நிச்சயமாகத் தவறவிட மாட்டார்கள். ஆனால், தேர்தல் முடிந்ததும் அவற்றைத் தவறவிட்டு மறந்துவிடுவார்கள். அடுத்த தேர்தலின்போதுதான் அது மீண்டும் ஞாபகம் வரும்.

இந்த அனுபவம் கூட இந்தப் பகுதி மக்களுக்கு உண்டு. அனுபவிக்காதவர்கள் நிச்சயமாக இம் முறை அனுபவிக்க வாய்ப்பும் உண்டு. ஆனால், குலுக்கள் ஆட்டலின்றிய பயணத்தை அனுபவிக்கத்தான் இவர்களுக்கு வாய்ப்பேயில்லை. என்னசெய்வது எல்லாம் அதிகாரிகளின் கையில். ☆

## காதால் கேட்டவை - கனகரவி



# போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்

போதைத் தடுப்புப்பிரிவு - பொலிஸ் துறையில் 1973 ஆம் ஆண்டு முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பிரிவினை ஆர்.சுந்தரலிங்கம் அன்றைய நாளில் ஆரம்பித்து வைத்தார்.

இன்றைய நாளில் அரசும் அதனைச் சார்ந்தவர்களும் சமாதானத்தை முன்னெடுப்பதில் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றார்கள். சமாதானத்தைச் செயற்படுத்துவதில் மிகுந்த நம்பிக்கையோடு செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு மத்தியில் சமாதானத்தைக் குழப்புகின்ற சக்திகளும் செயற்பட்டு வருகின்றன. அத்தகைய குழப்புகின்ற சக்திகளில் ஒன்றாக போதைப் பொருள் கடத்துகின்றவர்களின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

இந்தச் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

தேசிய மட்டத்தில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்ற இந்தப் பிரச்சினைகளைக் களைவதற்குப் பொலிஸாரும், ஏனைய சமுக நலன்விரும்பிகளும் விரும்புகின்றனர். அவர்கள்-போதைப்பொருட் கடத்தல் தடுப்புக்களில் அக்கறையோடு செயலாற்றி வருகின்றனர்.

அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்த வகையில் போதைப பொருள் தடுப்பு முயற்சிகளில் ஈடுபடும்போது, அவற்றைத் தடுப்பது இலகுவான பணியாக அமைந்துவிடும் என்பது சாத்தியமான தொன்றாகும்.

உலகத்தின் வரைபடத்தோடு ஒப்பிடுகையில், எமது இலங்கை நாடானது ஒரு சிறிய நாடாகக் காணப்படுகின்றது. அத்தகைய சிறியதொரு நாட்டில் - ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையாக உள்ளார்கள் என்பது வேதனையளிக்கும் விடயமாக காணப்படுகின்றது.

போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், நாளொன்றிற்கு போதைப் பொருளுக்கு செலவிடும் பணத்தின் பெறுமதி - ஐந்து மில்லியன் ரூபாய் ஆகும்.

இலங்கை போன்ற சிறிய நாடுகளில், இவ்வளவு பெரியதொகை



போதைப்பொருள் பாவனைக்காக செலவிடப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தியாகக் காணப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை - போதைப்பொருள் கடத்துகின்ற நாடுகளைப் பொறுத்தளவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடாக விளங்குகின்றது. தற்போது இலங்கைக் கூடாகவே பல்வேறு நாடுகளுக்கும் போதைப்பொருள் கடத்தப்படுகின்றது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், தாய்லாந்து, மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் போதைப்பொருட்கள் - உலகின் பல்வேறு நாடுகளுக்கும் இலங்கைக் கூடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன.

தரைமார்க்கம், விமானமார்க்கம் எனப் பல்வேறு மார்க்கங்களூடாக - வவுனியா மாவட்டத்துக்கு இவை கொண்டுவரப்படுகின்றன.

விளையாட்டுப் பொருட்கள், மின் உபகரணங்கள், பால்மாப் பைக்கற்றுக்கள் என்பவற்றில் பொதிசெய்து, விமானம் மூலமாக போதைப்பொருட்களைக் கடத்துகின்ற செயற்பாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில், பெருமளவிலான போதைப்பொருட்கள் கடத்தல் முயற்சிகளை நாங்கள் (பொலிஸார்) கண்டுபிடித்திருக்கிறோம்.

ஆணுறைக்குள் போதைப் பொருட்களை வைத்துக் கடத்திக்கொண்டு வரும் மிக ஆபத்தான, ஒரு பாரிய கடத்தல் முயற்சியையும் போதைப் பொருள் கடத்துவோர் மேற்கொண்டிருந்தனர். விமானநிலையத்தினூடாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவரைக் கண்டு பிடிப்பதற்கு 21 முறை முயற்சி செய்யவேண்டியிருந்தது. பொலிஸாரின் அந்த முயற்சி காரணமாகவே இவர்களில் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் முயற்சிகள், அவற்றைக் கண்டுபிடித்தமை ஆகியன புள்ளிவிபரங்கள் இல்லாமல் எழுந்தமானமாகக் கூறும் விடயங்கள் அல்ல.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் ஊடாக, போதைப்பொருட்களைக் கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது, வருகின்றது. இராமேஸ்வரத்திலிருந்து கடல் மார்க்கமாக 45 நிமிடத்துக்குள் தலைமன்னாரை அடைந்துவிடலாம்.

ஆகையால், கடல்மார்க்கமாகப் போதைப்பொருட்களைக் கடத்துவது இலகுவானதாக அமைந்துவிடுகின்றது.

இந்த மார்க்கமாகவே ஏராளமான போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு வந்துள்ளன. ஹெரோயின், வெள்ளைத்தூள், பிறவுண்தூள் கடத்துகின்ற முயற்சிகள் பிடிபட்டிருக்கின்றன.

2003.01.28 ஆம் ஆண்டு 23 கிலோ போதைப்பொருட்களும், 2000.09.01 ஆம் ஆண்டு 38 கிலோ போதைப்பொருட்களும், 2002.11.21 ஆம் ஆண்டு 18 கிலோ போதைப்பொருட்களும் கடத்தப்பட்டமையைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

1997 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டுவரையில், இவ்வளவு பெருந்தொகையான போதைப்பொருட்கள் கடத்தப்பட்டமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போதைப்பொருள் கடத்தல் முயற்சி தொடர்பாகக் கூறப்படவேண்டிய முக்கியமான செய்தி ஒன்றும் உள்ளது. இலங்கையில் வாழ்கின்ற பல்லின மக்களில், முஸ்லிம் இன மக்களே ஒப்பீட்டின்படி அதிகளவில் போதைப்பொருட்களைக் கடத்தியமைக்காகவும், பாவித்தமைக்காகவும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பதே அந்த விடயமாகும்.

போதைப்பொருட்களைக் கடத்துவதும், அவற்றைப் பாவிப்பதுமான செயல்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

போதைப்பொருட்கள் பாவனையைத் தடுப்பதற்கு, அனைத்துப் பிரிவிலிருந்தும் ஒத்துழைப்பு அவசியமானது. போதைப்பொருட்களைக் கடத்துபவர்களுக்குச் சாதகமாக எவரும் இருக்கக்கூடாது என்பதற்காகவே, போதைப்பொருள் பாவனைத் தடுப்புக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ☆

*வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 12.02.2004 இல் பொலிஸாரின் போதைத் தடுப்புப் பிரிவினரால் நடத்தப்பட்ட போதைத் தடுப்புக் கருத்தரங்கில் கூறப்பட்ட விடயங்களின் தொகுப்பு இங்கே தரப்படுகின்றது.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை*
*அன்றே ஒழிய விடல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்மக்களும், பொதுத்தேர்தலும்

தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு இன்னும் சிலநாட்களே இருக்கும் வேளையில், வேட்பாளர்களை தேர்வுசெய்து நியமிப்பதில் - எல்லாக் கட்சிகளுக்கும், கூட்டமைப்புக்களுக்கும் நெருக்கடிகளும், குழப்பங்களும் அதிகரித்துள்ளதுடன் கட்சிமாறல் நடவடிக்கைகளும் ஆரம்பமாகியுள்ளது.

தென்பகுதி அரசியல் கட்சிகளின் கூட்டணிகளிடையேயான முரண்பாடுகளுக்கு மத்தியிலான உடன்படிக்கைகள், கொள்கையடிப்படையில் உறுதியான தன்மைகளைக் கொண்டிராத நிலையில், வெறுமனே நாடாளுமன்றக் கதிரைகளை மட்டுமே இலக்குவைத்து, தேசிய நலனை கருத்தில் கொள்ளாத, சுயநல அபிலாஷைகளை மட்டுமே கவனத்தில் கொண்டதாக இருப்பதால், இந்தத் தேர்தலில் எவருக்குமே உறுதியான, நேர்மையான, ஜனநாயகத்தன்மை கொண்டதான கொள்கைகளை முன்வைத்து போட்டியிட மாட்டார்கள் என்பது உறுதி.

தென்னிலங்கையின் சந்தர்ப்பவாதக் கூட்டணிகளில் பிரதான இரண்டுமே, இனவாதப் பாரம்பரியத்தை கொண்ட கட்சிகளை உள்ளடக்கியவையேயாகும்.

முன்னாள் பொதுஜன ஐக்கியமுன்னணியானது, இந்தத் தேர்தலில் சமாதான விரோத சக்தியான ஜே.வி.பியுடன் புதிதாக கூட்டைவைத்துக் கொண்டதைத் தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக மாற்றம் கண்டதையடுத்து, அதன் இனவாதக் கொள்ளைகள், மீதான தீவிரம் மேலும் அதிகரித்துள்ள நிலையில், இந்த முறை தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது.

இந்தக் கூட்டுமுன்னணி தற்போதைய சமாதான முன்னெடுப்பு முயற்சிகளின் அனைத்து அம்சங்களையும் வெளிப்படையாகவே நிராகரிப்பதுடன், புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த உடன்பாடுகள் அனைத்தையும் மீளாய்வுசெய்ய வேண்டிய நிலை உள்ளது என்று அறிவித்துள்ளமையானது, இந்த இரண்டாண்டு கால சமாதான நகர்வுகள் அனைத்தையும் அர்த்தமற்றதாக்கியுள்ளதுடன், நிபந்தனைகளுடன் கூடிய புதிய உடன்பாடுகளை ஏற்படுத்தப்படவேண்டும் என கூறியுள்ளமையானது, மீண்டும் சமாதான முயற்சிகளை புதிதாக முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்ற அவர்களின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவுமுள்ளது. இது மற்றொரு, தமிழ் மக்களை ஏமாற்றிக் காலங்கடத்தும் வஞ்சக எண்ணத்துடனான, நடவடிக்கை என்பதில் ஐயமில்லை.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியானது, இதுவரை அதிகார வளமோ - பலமோ அற்ற வெறுமையான ஒரு அரசாங்கத்தை நடத்திக் கொண்டே, சர்வதேச சமூகத்தின் ஆலோசனை மற்றும் பின்னணி பலத்துடன் இந்த இரண்டாண்டு காலம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டதெனலாம். அதாவது, சுயாதீனமாக எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரம் இல்லாத ஒரு பிரதமராக, ஜனாதிபதி விரும்பினால் அவரை ஒரே நாளில் தூக்கியெறிந்து விடக்கூடிய ஒருவராகவே , மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நிலையிலும் இருந்தார் என்பது பரிதாபமான ஒன்றேயாகும்.

இந்தநிலையில், சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தீர்க்கமாக எந்த முடிவையும், ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்றி எடுக்கமுடியாததாலேயே. ஜனாதிபதியின் அதிகாரவலுவுக்குப் பயந்து, அப்படி எடுக்காததாலேயே - புரிந்துணர்வு உடன்பாட்டின்படி பல விடயங்களை அமுல்படுத்தமுடியாமல் போயிற்று. மிக அத்தியாவசியமானதும், சமாதானத்தின் பிரதான அம்சமாக இருக்கவேண்டியதுமான, மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே அவரால் மேற்கொள்ளமுடியாது போயிற்று.

இப்படிப்பட்ட நிலையில் - மீண்டும் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தி, அதனைத் தொடரவேண்டியதற்கான மக்கள் ஆணையை மீண்டும் கோரி, ஐ.தே.க முன்னணி களமிறங்கவேண்டிய சூழல் உள்ளதால், ரணிலின் தேர்தல் வியூகமானது, சமாதானம், வெளிநாட்டுதவிகள், பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தியதாகவே அமையப் போவதும் நிச்சயமாகும்.

சந்திரிகா தலைமையிலான சுதந்திரக்கூட்டமைப்பு பதவியேற்க நேரிட்டால், தற்போதைய சமாதான முயற்சிகள் செயலற்றுப்போய்விடும் நிலையே காணப்படும் சூழலில், ரணில் மீண்டும் பதவியேற்க நேரிட்டால். இதே ஜனாதிபதியே தொடர்ந்தும் 2006 வரை பதவியில் இருக்கவேண்டிய நிலையில், சமாதான முயற்சிகள் யாவும், தெனாலிராமனின் குதிரையைப் போல் மாதம் காத வெளி நகர்வதே கஸ்டமாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சூழலில், தமிழ் மக்கள் தங்களின் பொறுப்பினை உணர்ந்து செயற்படுதல் என்பது மிக முக்கியமான கடமையாக அவர்கள்முன் உள்ளது.

பேரினவாதக்கட்சிகளையோ, அவர்களுக்கு அனுசரணையாக இயங்கி, தமிழ்மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர்களையோ ஆதரிப்பதால், ஏற்படக்கூடிய அவலங்களை உணர்ந்து தமிழ் மக்கள் செயற்படவேண்டிய காலகட்டம் இது.

வீதியைப் புனரமைத்தவர்களை, கோயிலைப் புனரமைத்தவர்களை நன்றியுடன் நினைக்கலாம். ஆனால், அவர்கள் தமிழினத்தை அழிக்க முனைந்தவர்களோடு இணைந்து செயற்பட்டவர்கள் என்பதில், இன உணர்வுடன் சிந்தித்துப் பார்த்தால், அதனோடேயே ஏமாற்றுத்தனத்தின் - சுயநலத்தின் ஆழங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

வரலாற்றுத்தவறைப் புரிந்த குற்ற உணர்வுடன் தமிழ் மக்கள் வாழக்கூடாது என்பதே முக்கியம். இதற்குப் பேரினவாதிகளையும், அவர்களின் ஆதரவுக்குழுக்களையும் நிராகரித்து, புறக்கணிக்கும் இனமான உணர்வுடன் செயற்படவேண்டிய காலகட்டம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# கடற்படையினரின் படகுகளைப் பயன்படுத்த கண்காணிப்புக்குழுவுக்கு அனுமதி

(கொழும்பு)

கடற்படையினரது படகுகளில் சென்று கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹௌவ்டேக்கும் இடையில், கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றை அடுத்தே, இந்த அனுமதி வழங்கப்பட்டது.

கடற்படையினரின் கப்பலிலிருந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை கடற்படையினர் அவதானித்தது தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்கினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், கடற்படைப் படகுகளில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை ஏற்றிச்செல்ல கடற்படையினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா, நோர்வே பிரதமருக்கு விடுத்த வேண்டுகோளுக்கமைய, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் நோர்வேக்குத் திரும்ப அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்பின், இந்த மாதம் முதல் கண்காணிப்புக் குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள புறூவ் ஹௌவ்டே, சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார்.

இந்த நிலையில், கடற்படைத் தளபதியுடன் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட விசேட பேச்சுவார்த்தைகளையடுத்து, கடற்படையினரின் கப்பலிலிருந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# தொழிற்சாலை பாவனைக்குரிய தலைக்கவசங்களை பாவிக்கத்தடை

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் செலுத்தும்போது, தொழிற்சாலைப் பாவனைக்குரிய தலைக்கவசங்களை பாவிக்கவேண்டாம் என, போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். இந்த தலைக்கவசங்கள் பாதுகாப்பு குறைந்தவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

சில மோட்டார் சைக்கிள் சாரதிகள், தொழிற்சாலைகளில் வேலைகளின்போது அணியும் தலைக்கவசங்களையே பயன்படுத்திவருகின்றனர். இந்த தலைக்கவசங்கள் மிகவும் மெல்லியனவாகவும், பாதுகாப்புக் குறைந்தவையாகவும் உள்ளன.

இந்த தலைக்கவசங்களால் தலையின் பின் பிடரிப்பகுதி, காதுப்பகுதி என்பனவற்றை விபத்துக்களின்போது பாதுகாக்க முடியாமல்போய்விடும். மேலும், இந்த தலைக்கவசம் பட்டி கொண்டு நாடியுடன் இணைக்கப்படாமல், வாகனம் விபத்துக்குள்ளானவுடனேயே தலையில் இருந்து தூக்கி வீசப்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இவற்றை கருத்தில்கொண்டு, மோட்டார்சைக்கிள் செலுத்தும்போது, இந்த தலைக்கவசங்களை அணிவதைத் தவிர்க்கும்படி பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். விபத்துக்கள் அதிகரித்துள்ள வேளையில், இந்த விடயம் தொடர்பாக உரியகவனம் செலுத்தும்படியும், இனிவரும் காலங்களில் இந்த தலைக்கவசம் அணிபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போக்குவரத்துப்பொலிஸார் தெரிவித்தனர்.

(94)

# கலட்டிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவமுகாம் நேற்று அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கலட்டிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம், நேற்று அகற்றப்பட்டது. அப்பகுதியிலிருந்த வீடு, கடை உரிமையாளர்கள் இராணுவ உயரதிகாரிகளுடன் கலந்துரையாடியதைத் அடுத்து அந்தப் பகுதியில் இருந்த இராணுவத்தினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

அந்தப் பகுதி கிராமசேவையாளர் மற்றும் பலர், அச்செழு இராணுவத்தினருடன் கலந்துரையாடி, வெகுவிரைவில் இந்த முகாமை அகற்றி மக்கள் பாவனைக்கு வழங்கவேண்டும் என கோரியிருந்தனர். இதனை அடுத்து, பிறவுண் வீதி கலட்டி முகாமும், தலையாழிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாங்களும் அகற்றப்பட்டு - வீடு, கடை என்பன உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தப்பகுதியில் 4 வீடுகள். ஒரு பேக்கரி மற்றும் 3 கடைத்தொகுதி என்பன பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்துடன், உரிமையாளர் இல்லாத வீட்டினை உரியவர் வரும் வரை தம்முடைய பராமரிப்பில் அது இருக்கும் என படையினர் கூறியுள்ளனர்.

பாதுகாப்பு வேலியாகப் போடப்பட்டிருந்த முள்வேலிகள் அகற்றப்பட்டதுடன், இந்தப்பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றிய காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் பாதுகாப்பு அணை இந்தப்பகுதியூடாகவே அமைக்கப்பட்டமையால், அதிகளவலான கண்ணிவெடிகள் இங்கு புதைக்கப்படடிருக்கலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(205)

# நான்கு கடற்தொழிலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் நான்கு மீனவர்கள் படையினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்து, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

இன்பருட்டி கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 27 பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கென, அந்தப் பகுதி மீனவர் சங்கத் தலைவர்கள், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவரிடம் குறித்த சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனக் கூறப்பட்ட மீனவுப்பிரதிநிதிகள் சிலரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவருமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பணிப்பின்னயடுத்து, நேற்றமுன்தினம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்ற மீனவசங்கப் பிரதிநிதிகள் நால்வருமே படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகினர். இந்திய மீனவர்கள் இந்தக் கடற்பரப்பினுள் வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை உள்ளூர் மீனவர்கள் தடுக்கக்கூடாது எனவும், அதற்கான அங்கீகாரம் அவர்களுக்கு இல்லை எனவும் கூறியே தாம்தாக்கப்பட்டதாக மீனவர்கள் கூறினர்.

(202)

அறியாத பக்கங்கள் - செல்வா

# தமிழ் உணர்வைக் கட்டுப்படுத்தும் தணிக்கைக் குழுவின் செயற்பாடுகள்

தமிழ் நாட்டில் திரைப்படம் ஒன்று வெளிவருவதென்றால் பெரும் பிரச்சனைக்கு உள்ளாக்கப்படுகின்றவர்கள் - இயக்குநர்களும், பாடலாசிரியர்களுமேயாவார். தமிழ் சாயல் பூசிய சமூகக் கருத்துக்களை, சினிமாமூலம் வெளிக்கொணர்வது என்பது முடியாதகாரியமாவே இருந்து வருகின்றது. தமிழிற்கான சமூக வாழ்வோட்டத்தின் ஒரு திரைப்படம் என்றதும், புலிகளை தொடர்படுத்திப் பார்க்கின்றார்கள். தணிக்கைப் பிரிவினர் (Censor Bord) தமிழ் விடுதலைக்கான அடையாளமே புலிகள்தான் என்பதை இதன்மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

தமிழ் விடுதலை அடையக்கூடாது என்பதில்தான் முழுக்கவனமாக இருக்கின்றார்கள். திரையின்மூலம் இலகுவாக மக்கள் மத்தியல் சென்றடையும் கருத்துக்களை உன்னிப்பாக பார்த்திருந்து, தமிழ் அடையாளத்திற்குத் தேவையான சாத்தியக்கூறுகள் அற்றநிலையில் தென்படும் காட்சிகளை வெளியிடுவதில்தான் குறிக்கோளாக இருக்கின்றனர். இவர்கள் பார்ப்பணிய இனத்தைச் சேந்தவர்களாவர். தமிழ் நாட்டில் தமிழனின் இடத்தில், தமிழனுக்கே ஒரு வேலை கிடைக்காமல் செய்து, கதைகளில் - காதல் கதைகளாகவே கூடுதலான படங்கள் வெளிவருகின்றன. கதையின் கரு ஒன்றாகவும், காட்சியை வித்தியாசமாகவும் எடுத்து, ஒரு வட்டத்திற்குள்ளே இயக்குநர்கள் நிற்கின்றார்கள். அந்த வட்டத்திற்குள் இருந்து வெளியே வருவதென்றால் இன்று வரை முடியாத காரியமாகவே இருந்து வருகின்றது. இந்த நிலையை நாளைய இயக்குநர்கள் மாற்றியேயாகவேண்டும், இல்லையெனில் தமிழ் அடையாளங்கள் அழிவதற்கான ஒரு காரணமாகவும் இதுவே அமைந்துவிடும்.

திறமையான பாடலாசிரியர்கள் வெளியிட்டுள்ள கவிதைப் புத்தகத்தில், இவர்களின் எழுத்துத் திறமை நன்கு தெரியும். சினிமாவில் பாடல்கள் எழுதுவதை வைத்து, கவிஞர்களை மதிப்பிடமுடியாது. கவிஞர்களால் என்ன செய்யமுடியும். ஒரு இசையமைப்பாளர் ஒரு படத்தில் 5 பாடல்களுக்கு மெட்டு அமைத்து, ஒலிப்பேழையில் பதிவுசெய்து, பாடல்கள் எழுதும் கவிஞர்களிடம் கதைக்கான சம்பவத்தினைச் சொல்லி, அதற் கேற்பப் பாடல்கள் எழுதச சொல்லுவார்கள். ஒரு பாடலில் ஒரு சரணமும், இரண்டு பல்லவியும் இடம்பெறவேண்டும். ஆனால், பாடலாசிரியர்களிடமிருந்து இரண்டு சரணமும், நான்கு பல்லவியும் எதிர்பார்ப்பார்கள். ஏனெனில், அவர்களுக்குப் பிடித்தமான வரிகளை அதற்குள் இருந்து தெரிவு செய்து பாடல்களைப் பதிவுசெய்வார்கள்.



இயக்குநர் ஆர்.கே.செல்வமணி எடுத்த திரைப்படம்தான் 'குற்றப்பத்திரிகை' ஆகும். இதன கதையானது ராஜுவ் காந்தி கொலை சம்பந்தமாக எடுக்கப்பட்ட படமாகும். இந்துப்படத்தினை வெளிவிடாது தடைசெய்தது தணிக்கைக்குழு. இன்று வரையில் இந்தப் படம் வெளிவரவில்லை. ஆனபடியால் நல்ல கதையினை உருவாக்கவேண்டிய இயக்குநர் ஆர்.கே. செல்வமணி - வர்த்தக அடிப்படையில் படத்தினை இயக்கி, இன்றைய இயக்குநர் என்ற பட்டியலில் இடம்பெறாமல் போனதிற்கான காரணமாக இது அமைகின்றது.

அதேபோலத்தான் 'காற்றுக்கென்னவேலி' படத்தினை இயக்கியவர் புகழேந்தி. இந்திய இராணுவம் இங்கே வந்து செய்யும் அட்டகாசத்தில், போராளியாக மாறிய ஒரு பெண் போராட்டத்தில் படுகாயமடைந்து, சிகிச்சைக்காக கடல் வழியாகத் தமிழ் நாட்டிற்குச் சென்று சிகிச்சை பெறும்போது, தமிழ் நாட்டில் படும் இன்னல்களையும், திரும்பி மீண்டும் கடலினால் வந்துசேரும் காட்சியையும் படமாக எடுத்திருக்கிறார்.

இந்தப் படத்தினை வெளியே கொண்டு வருவதற்கு தணிக்கைப்பிரிவுடன் போராட முடியாமல், இயக்குநர் உண்ணாவிரதம் இருக்க - தமிழ் நாட்டுக் காவல்துறையினர் உண்ணாவிரதத்தினை குழப்பி, இயக்குநரையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பின்பு டெல்லியிலிருந்து தணிக்கைப் பிரிவினர் படத்தினை வெளியிடுவதற்கு உத்தரவை பிறப்பித்தனர். இயக்குநர் புகழேந்தியையும் விடுதலை செய்தார்கள்.

இயக்குநர் புகழேந்தியிடம் தொலைபேசியில தொடர்புகொண்டு இருக்கிறார் ஆர்.கே செல்வமணி. உங்களைப்போல் நானும் போராட்டத்தில் இறங்கியிருந்தால், அன்று எனது படமான 'குற்றப்பத்திரிகை' வெளிவந்திருக்கும் என்று சொன்னார்.

தமிழ் அடையாளங்களை திரையின் மூலம் வெளியே கொண்டுவரமுடியாத சூழ்நிலையில், ஒரு படத்தினை எடுத்துக் காட்டிய இயக்குநர் புகழேந்தி - பாராட்டக் கூடியவர். சமூகத்திற்கு நல்ல கருத்துள்ள திரைப்படங்கள் இனிவரும் காலங்களில் வெளிவரத்தான் போகின்றது. தமிழ் நாட்டில் நாளைய இயக்குநர்கள் பலர் சாதிக்கத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது, பொறுமையைக் காத்த வண்ணம் முயற்சிசெய்து கொணடுதான் இருக்கின்றார்கள்.

திரைப்படத்தினை பார்த்து விட்டு இயக்குநர்களையோ, பாடல்களை கேட்டு விட்டு பாடலாசிரியர்களையோ குற்றம் சொல்வது ஆகாது. இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்றால், தணிக்கைப்பிரிவினரை இல்லாமல் செய்ய வேண்டும் அல்லது அதை மாற்றியமைத்து அதில் தொழில் புரிபவர்கள் தமிழர்களாக இருக்கவேண்டும். அப்படியானால்தான் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்ற சிறந்த முழுமை நிரம்பிய ஒரு திரைப்படம் வெளிவரமுடியும்.



பிற இடத்திலிருந்து வந்து ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். இவர்கள்தான் இந்தப் பிரச்சனைக்கு மூல காரணமாகவும் அமைகின்றார்கள்.

சிறந்த இயக்குநர்கள்தான் திரைப்படத்தை இயக்குகின்றார்கள். ஆனால், இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் - சொலலிலடங்காது. அதாவது, தமிழ் சமூகத்திற்கான ஒரு சிறந்த படம் இயக்கவேண்டும் என்ற கனவோடு, கதையையும் தெரிவுசெய்து, சினிமா தயாரிப்பாளர்களிடம் கதையினைச் சொல்லிவிட, படத்திற்கான பணத்தினை செலவிடுகின்ற தயாரிப்பாளர்கள் விரைவில் ஒத்துவரமாட்டார்கள். ஏனெனில், தயாரிப்பாளர்களுக்குள்ளும் நிறைய அழுத்தங்கள் இருக்கின்றன. அதாவது, செலவு செய்த பணத்தை மீள எடுக்கமுடியால் இருப்பதே அதுவாகும்.

இயக்குநர்களில் பலர் - வேறு வழியின்றி கதையினை மாற்றி அமைத்து, தயாரிப்பாளரின் வேண்டுதலுக்கு அமைய படத்தினை இயக்க தயாராகி விடுகின்றார்கள்.

இயக்குநர்கள் சாதிக்கப் போராடி, தாங்கள் எதிர்பார்த்த கதையினை திரையில் வெளியிடமுடியாமல், ஏதோவெரு கதையினை அதாவது, காதல் கதையினை எடுத்து, அந்தப் படம் நூறு நாட்கள் திரையரங்குகளில் ஓட, பிரசித்தி பெற்ற இயக்குநராக பெயரெடுத்து, திருப்தியடையாத இயக்குநர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

பாடற் பதிவுகளில், திறமையான வரிகளை தேர்வு செய்கின்ற இசையமைப்பாளரும் இருக்கின்றார்கள். ஆகக் கீழ்த்தரமான வரிகளை தெரிவுசெய்கின்ற இசையமைப்பாளர்களும் இருக்கின்றார்கள்.

ஒலிப்பேழையானது விற்பனையாகி இலாபம் ஈட்டிவிடவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன்தான் இசையமைப்பாளர்கள் இருக்கின்றார்கள்.

அந்தச் சூழ்நிலையில் நல்லவரிகளை எழுதி, அவை பாடல்களாக வெளிவராத பட்சத்தில், கூடுதலான கவலைகள் கவிஞர்களிடத்தே காணக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில், கவிஞர்கள் எழுதிக்கொடுக்கும் வரிகளில் - இசைக்கேற்ற வரிகளை எடுத்துக் கொண்டு நல்ல கருத்துள்ள வரிகளை விட்டு விட்டு பாடல்களைப் பதிவுசெய்வதேயாகும்.

பாடல்களுக்காகவும் திரைப்படங்கள் கூடுதலான நாட்கள் திரையரங்குகளில் ஒடியிருக்கின்றன. கதையைவிட பாடல்கள் இன்று வித்தியாசமான முறையில் இருப்பதால், அதற்கேற்ப காட்சிகளும் அமைவதால், கதைக்கு உறுதுணையாக இருக்கின்றது. கதையினைப் பிரட்டிப்பிரட்டி போட்ட திரைப்படங்களைப் பார்த்த ரசிகர்களுக்குப் பாடல்கள் ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கிறது.

கூடுதலாகப் பேசுவதைவிட, திரைக்கு ஒளிப்பதிவு மூலம் நிறைய கதைக் கருவினைக்கொண்டு வந்து சேர்க்கலாம். அதாவது, நீண்ட கதைவசனம் இன்றைய சூழலில் எடுபடப்போவதில்லை. ஆகவே, திரைக்குவரும் இயற்கைக் காட்சிகளே பல கதைகள் சொல்லும். அந்தளவுக்கு காட்சியினை ரசிப்பதைத்தான் கூடுதலான ரசிகர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதற்கேற்பதான் இயக்குநர்களும் முயற்சிசெய்து வருகின்றார்கள்.

அதாவது, யாழ்ப்பாணத்தவரின் முகத்திற்கும், தமிழ்நாட்டவரின் முகத்திற்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. அதேபோல் அணியும் உடைகளிலும் பல வித்தியாசங்கள். இப்படியாகக் காட்சி இயற்கையோடு ஒட்டியிருக்கின்றது. நிறைய தமிழ் நாட்டு இயக்குநர்கள் இங்கே வருவதற்கான காரணம் - போராட்டம் நடந்த பூமி, இயற்கையாகவே காட்சிக்கு மெருகூட்டும். ஆனால், தமிழ் நாட்டில் SET போட்டுத்தான் இந்த அமைப்பினை செயற்கையான காட்சியாகவே எடுக்கக் கூடியதாகவுள்ளது.

ஆகவே இயற்கைக்கு தனி இடமான யாழ்ப்பாணம். தமிழ் நாடு இயற்கையால் பெரிதும் சூழப்பட்ட இடம்தான. ஆனால் பல திரைப்படங்களில் அதிகமான காட்சிகள் வெளிவந்துவிட்டன. ஆனபடியால் யாழ்ப்பாணத்தினை கருவாகக்கொண்டு இங்கே படம் எடுக்கும் திட்டத்தோடு வருகின்றார்கள். ◆

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VIII - சிவா

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்



1989 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி இரவு பெலானாஸ் நாட்டிலிருந்து, போலந்து நாட்டின் எல்லையைக் கடப்பதற்கு 7 பேர் கொண்ட இலங்கைத் தமிழர் குழு ஒன்று புறபபட்டது. பெலானாசின் குறோடினோ நகரத்தில் இருந்து புறப்பட்ட இந்தக்குழு - நொமான் ஆற்றைக்கடந்து போலந்தின் பியாவ்ரொக் நகரத்திற்குச்சென்று, அங்கிருந்து ஜேர்மனியின் பேர்லின் நகரத்துக்குச் செல்ல திட்டமிட்டிருந்தது.

பெலானாஸ் நாட்டில் அப்போது -20 பாகை உறைபனிக்குளிர் நிலவியது. நொமான் ஆறு உறைந்துபோயிருந்தது. இவர்களது பயணத்தை ஏற்பாடுசெய்த போலந்து நாட்டு பிரயாணமுகவர் - நொமான் ஆற்றைக்கடந்து போலந்துக்கு வந்தால், அவர்களை வாகனத்தில் ஏற்றிச்சென்று, பியாங்ரொக் நகரத்தில் வைத்து பாரவூர்திகளில் பேர்லினுக்கு அனுப்புவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இதற்காக அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவர் 1500 அமெரிக்க டொலர் பணத்தைப் பெற்றிருந்தார்.

அந்த முகவர் கூறிய வழித்தடத்தில் இந்தக் குழுவினர் நள்ளிரவுவேளையில், உறைந்துபோன ஆற்றின் பனிப்பாலத்துக்கு மேலாக மெதுவாக நடந்துசென்றனர்.

அந்த இடத்தில் நொமான் ஆறு 200 மீற்றர் அகலமுடையதாக இருந்தது. அந்த நேரம் அந்த ஆற்றின் மேலாக, மிகப்பெரிய பனி மூட்டம் சூழ்ந்திருப்பதால் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கோ அல்லது காவல்துறையினருக்கோ ஆட்கள் எல்லையைக் கடப்பது தெரிவதில்லை.

நமது இளைஞர் குழுவினரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உறைபனிக் குளிரைப் பொருட்படுத்தாது, அந்த ஆற்றைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

முக்கால் வாசித்தூரம் அவர்கள் அந்த ஆற்றைக் கடந்துசென்ற நேரத்தில், ஏற்கனவே ஆற்றின்மேல் இருந்த பனிப்பாளம், நொருங்கியிருந்த ஒரு பகுதியில் எதிர்பாராத விதமாக காலை வைத்ததால் ஆற்றில் மூழ்கிவிட்டனர்.

இதில் ஒரு இளைஞன் மட்டும் உயிர் தப்பி, போலந்துக் கரைக்கு வந்துசேர்ந்து, குளிரில் விறைத்து மூர்சையாகிவிட்டான். போலந்து நாட்டின் எல்லைக்காவல் படையினர் அவனைக் கண்டுபிடித்து, அவசர சிகிச்சையளித்த பின்னர் - உலங்குவானூர்தி மூலம் தலைநகர் வார்சோவுக்கு எடுத்துச் சென்றனர்.

வார்சோ மருத்துவமனையில் 24 மணி நேரம் கழித்துத்தான் அவனுக்கு சுயநினைவு திரும்பியது.

அவன் அங்கு தன்னுடன் வந்தவர்களுக்கு நேர்ந்த கதிபற்றிக் கூறியபோது - அங்கே இருந்தவர்களுக்கு அதனைப் புரிந்துகொள்வதற்கு ஆங்கிலம் தெரிந்திருக்கவில்லை.

அவனுடைய பெயர் பொன்னம்பலம் கேதீஸ்வரன் என்பதை மட்டுமே அவர்கள் புரிந்துகொண்டனர். அவன் விடாப்பிடியாக Help me Help me என்று கத்திக்கொண்டிருந்தபடியால், அவன் ஏதோ சொல்ல விரும்புகிறான் என்பதைப் புரிந்துகொண்ட வார்சோ நகர காவற்துறையினர் - வெளிவிவகார அமைச்சிலுள்ள ஆங்கிலம் தெரிந்த ஒரு அதிகாரியை அழைத்துவந்தபோது, நடந்த அனர்த்தம் அவர்களுக்குத் தெரியவந்தது.

அவர்கள் அதைத் தெரிந்துகொண்டபோது, அந்தச் சம்பவம் நடந்து மூன்று நாட்களாகிவிட்டது. போலந்தின் அவசர உதவி மீட்புப்பணிக் குழுவொன்று கேதீஸ்வரன் என்று தன்னை அடையாளப்படுத்திய, அந்த இளைஞன் மயங்கிக் கிடந்த பகுதியான நொமான் ஆற்றில் தேடுதல் நடத்தியபோது எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

கேதீஸ்வரன் கூறிய இடத்தில் இருந்த பனிப்பாறைச் சிதைவுகள் - மறுபடியும் உறைந்து பாளமாகிவிட்டது. அந்தப் பாளத்தை உடைத்து தேடுதல் நடத்த போலந்து மீட்புக்குழுவினர் முயலவில்லை.

அதற்குக் காரணம் - கேதீஸ்வரன் சொல்லிய தகவலின் நம்பகத்தன்மை தொடர்பாக அவர்களுக்குச் சந்தேகமிருந்தது.

சட்டவிரோதமாக போலந்துக்குள் நுழைந்ததை மறைத்து, தன்மீது அனுதாபம் ஏற்படவேண்டும் என்பதற்காக, அவன் பொய் சொல்லுவதாக நம்பிய போலந்து காவற்துறையினர்- அவன் மீது வழக்குப் பதிவுசெய்து ஒரு மாதம் சிறையில் அடைத்துவிட்டு, கொழும்புக்கு நாடுகடத்தி விட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் கழித்து - நல்ல கோடைகாலத்தில், லித்துவேனியா நாட்டின் கானாஸ் நகரத்துக் கருகில் அந்த ஆறு இளைஞர்களின் சடலங்களும் அடையாளம் தெரியாமல் உருக்குலைந்தநிலையில் கரையொதுங்கியது. (நொமான் நதி லித்துவேனியாவுக்கும் செல்கிறது)

இந்த விடயம் லித்துவேனியா ஊடகங்களில் வந்த பின்புதான், போலந்து அதிகாரிகள் கேதீஸ்வரன் சொன்ன தகவல் உண்மை என்பதை அறிந்தனர்.

போலந்து அதிகாரிகளுடன் இணைந்து, கேதீஸ்வரனைக் கண்டுபிடித்து, அவன் மூலம் ஏனைய ஆறு இளைஞர்களின் சடலங்களை அடையாளங்காண அல்லது அவர்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு முயன்றனர்.

ஆனால், அந்த முயற்சி கைகூடவில்லை என்றும், இறுதியில் அடையாளம் தெரியாத ஆறு இலங்கையர் என்ற குறியீட்டுடன் அந்த இளைஞர்களின் சடலங்கள் லித்துவேனிய அரசின் செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக 1990 ஆம் ஆண்டு இந்த விடயம் பற்றி செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்ட லெக்ஸ்பிரஸ் என்ற பிரஞ்சு சஞ்சிகை தெரிவித்திருந்தது.

(தொடரும்...)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# இந்திய - பாகிஸ்தான் அதிகாரிகளிடையே மூன்று நாள் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன!

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்திய அதிகாரிகளுக்கும், பாகிஸ்தான் அதிகாரிகளுக்குமிடையே மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பேச்சுவார்ததையில் காஷ்மீர் எல்லைப் பிரச்சினை முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது. இதன்மூலம் நிரந்தரமான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழிகாணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதற்சுற்றுப் பேச்சில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருண் குமார் சிங்கும், பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜலீல் அபாஷ ஜிலானியும் பங்குபற்றவுள்ளனர்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இறுதிப்பேச்சுவார்த்தையிலிருந்து தமது பேச்சுக்களை இருநாடுகளும் ஆரம்பிக்கவுள்ளதாக பி.பி.சியின் சபார் அபாஷ் இஸ்லாமாபாத்திலிருந்து தெரிவித்தார். இதனமூலம் பேச்சுக்களில் ஒரு தொடர்நிலையை ஏற்படுத்தமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அணுசக்தி தொடர்பான செயற்பாடுகளில் இருநாடுகளிடையே நம்பிக்கையை வளர்க்கக் கூடிய சாத்தியங்களையும் பேச்சுக்களில் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

3 ஆண்டுகளுக்குமுன்னர் இந்தியாவின் நகரான ஆக்ராவில் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன. ஆனால், அப்போதைய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தமைக்கு காரணம் பேச்சுக்கள் நன்கு திட்டமிடப்படாது விரைவாக நடத்தபட்டமையே. இதனால் இம்முறை திட்டமிட்டு மிகப்பெரிய வெற்றிகளை எதிர்பார்க்காது பேச்சுக்கள் நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னரே ஒருவர் மீது மற்றவருக்கு நம்பிக்கையூட்டும் செயற்பாடுகளாக - ரயில், பஸ், ஆகாயப் பயணங்கள் இரு நாடுகளிடையேயும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்தமாதம் நடைபெற்ற சார்க் மாநாட்டின் பின்னர் காஷ்மீர் பிரிவினைவாதிகளை, இந்தியத் தலைவர்கள் சந்திப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

# நேபாளப் போராளிகளுக்கெதிரான சபைத்தலைவர் சுட்டுக்கொலை!



(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ போராளிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்டிருந்த சபை ஒன்றின் தலைவர் கனேஷ் சில்வால் - தீவிரவாதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்த இரு நாட்களின் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாவோ போராளிகளினால் பாதிக்கப்பட்டவர்களினால் அமைக்கப்பட்டிருந்த அமைப்பொன்றின் தலைவரான இவர் தனது காரியாலயத்தில் வைத்து இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

இடதுசாரிகளின் 9 ஆம் ஆண்டு எழுச்சியின் கொண்டாட்டங்களில் அவர்களது முக்கிய தலைவர்கள் இருவரின் கொடும்பாவிகளை எரித்து தனது எதிர்ப்பினை இவர் அணமையில் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனிடையே நேபாளத்தில் மன்னருக்கும் பாராளுமன்றத்தில் உள்ள மாவோ ஆதரவாளர்களுக்கும் இடையே பதவிப்போட்டி காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவோ போராளிகளுக்கும், நோபாள அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் சென்ற ஆண்டு ஓகஸ்ட்டில் முறிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பழங்குடி இளைஞர்களுடன் மோதல் 40 அவுஸ்ரேலிய பொலிஸார் காயம்!



அவுஸ்ரேலியாவின் தலைநகர் சிட்னியில் பொலிஸாருக்கும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 40 பொலிஸார் காயமடைந்தனர்.

தொமஷ் கிக்கே எனப்படும் 17 வயதுடைய பழங்குடி இனத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் துரத்திச்செல்லப்பட்டவேளையில் கம்பிவேலியில் சிக்கி மரணமடைந்தார். இந்த இளைஞனின் மரணத்திற்குப் பொலிஸாரே காரணம் எனக கருதி ஆத்திரமடைந்த இளைஞர்கள் ரயில்நிலையத்தைத் தீக்கிரையாக்கியும், பொலிஸ் நிலையத்திற்குப் பெற்றோல் குண்டுகளை எறிநதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பழங்குடி மக்கள் செறிந்துவாழும் ரெட் பேம் என்ற மாவட்டத்தில் நடைபெற்றது. இதனிடையே இவ்விளைஞனின் மரணத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இளைஞனின் மரணம், ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டுவருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பல ஆண்டுகளின் பின்னர் சிட்னியில் நடைபெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இதுவெனவும், வெள்ளையர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் இடையே இன ஒற்றுமையில் இந்தச் சம்பவங்கள் விரிசலை ஏற்படுத்தியுள்ளதென புதிய தெற்கு பேல்ஸ் மாநிலத்தின் ஆளுநர் தெரிவித்தார்.

இதனிடையே நேற்றுமுன்தினம் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் நேற்றும் தொடர்ந்ததாகவும், பொலிஸார்மீது 100 இற்கும் மேற்பட்ட செங்கற்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எறிந்தவேளையில் பல பொலிஸாருக்கு காயம் ஏற்பட்டது. பழங்குடி மக்கள் வாழும் பிரதேசத்தின் தலைவர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கும்போது - அங்கு வாழும் மக்களை பொலிஸார் துன்புறுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

# லிபியாவின் ஏவுகணைகள் சீன வடிவமைப்பாம்!



லிபியாவில் காணப்பட்ட அணு ஆயுதங்கள் சில சீனாவின் வடிவமைப்பை ஒத்திருந்ததாக வொஷிங்ரன் போஸ்ட் என்ற பத்திரிகை தெரிவித்தது. சர்வதேச அளவில் நடத்தப்பட்ட விசாரணையில் 1980 ஆம் ஆண்டுகளில் சீனா அணுசக்தி ஆயுதங்களின் வடிவமைப்புகள் தொடர்பான தகவல்களை பாகிஸ்தானுக்கு வழங்கியிருந்ததெனவும், இவை பின்னர் பாகிஸ்தானிலிருந்து லிபியாவிற்கு விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

லிபியாவில் காணப்பட்ட அணு ஆயுத வடிவமைப்பு தொடர்பான ஆவணங்கள் சில சீன மொழியில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவிதமான வடிவமைப்புகளை வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கும் சீனா வழங்கியிருந்தது என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளுக்கு எதுவிதமான பதிலையும் சீனா தெரிவிக்கவில்லை. சீனாவில் அணு ஆயுத வடிவமைப்பின் பிரதிகளை அமெரிக்கா, பிரித்தானியா, சர்வதேச அணுசக்தி அமைப்பு ஆகியன பரிசீலித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானுக்கு அணுசக்தி தொடர்பான தொழில்நுட்பத்தை சீனா வழங்கியிருக்கலாமென்ற சந்தேகம் வலுவடைந்துள்ளதாகவும், பாகிஸ்தான் 1998 ஆம் ஆண்டு முதலாவது அணுகுண்டை வெடிக்கவைத்திருந்தது. அது லிபியாவிற்கு விற்றதைவிட நவீனமானதென வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

# குண்டுத்தாக்குதலில் 2 அமெரிக்க படையினர் பலி



பாக்தாத்தில் நேற்று இரண்டு குண்டுத்தாக்குதல்களில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

பாக்தாத்தின் தெற்கில் நடத்தப்பட்ட மற்றுமொரு தாக்குதலில் அமெரிக்கப் பிரஜை ஒருவர் கொலலப்பட்டும் 3 பேர்வரை காயமடைந்துமுள்ளனர்.

இதுவரை 540 அமெரிக்கப் படையினர் ஈராக் போரில் கொல்லப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டிருந்தபோதும், அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் அண்மைக்காலத்தில் நடைபெற்றுவரும் தாக்குதல்களில் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுகின்றது.

# எரிபொருள் வாகனத்துடனான மோதலில் மினிபஸ்ஸில் பயணம்செய்த 40 பேர் பலி!

உகண்டாவின் தென்பகுதியில் பயணிகள் வாகனமொன்று எண்ணெய்த்தாங்கி வாகனமொன்றுடன் மோதிக்கொண்டபோது எண்ணெய்த் தாங்கி வாகனம் வெடித்துச் சிதறியதில் 40 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரயாண நெருக்கடி மிகுந்த வீதியில் இநதச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தீப்பற்றிக் கொணட பயணிகள் வாகனத்திலிருந்து எரிந்து கருகிய நிலையில் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பிரெஞ்சு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் நால்வர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், எரிந்து கருகிய பலரது உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உகண்டாவில் வீதி விபத்துக்கள் அதிகளவில் இடம்பெற்றுவருகின்றன. 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற 15 ஆயிரம் வீதிவிபத்துக்களில் 2 ஆயிரம் பொதுமக்கள்வரை கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சிறுபான்மை அரசுக்கு ஆதரவு!

சிறுபான்மை அரசொன்றை சுலோபொடன் மிலோசெவிச்சின் சமஷ்டிக் கட்சியின் உதவியுடன் சேர்பியாவில் அமைக்கப்படவுள்ளது. பல கட்சிகள் இந்த அரசை அமைப்பதற்கு முன்வந்துள்ளன.

2000 ஆம் ஆண்டில் மிலோசெவிச்சை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு காரணமாகக் காணப்பட்ட கொஷ்ருனிக்கா பிரதமராகும வாய்புக்கள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் மிதவாத தலைவரான கொஸ்ருனிக்கா ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகளை அதிகம் பெறுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





பாக்தாத்தின் 50 மைல் தொலைவில் அமைந்துள்ள பலூஜாவில் பொலிஸ் நிலையமொன்றின்முன் ஈராக்கியப் பொலிஸார் ஒருவர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளதையும், பலூஜாவில் அம்ரியா என்ற இடத்தில் அமெரிக்க வான் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈராக்கிய உள்ளூர் தலைவர் ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் ஈராக்கியர்கள் - அமெரிக்காவுக்கெதிராகக் கோஷமிடுவதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொதுத்தேர்தலுக்கு இன்றுமுதல் வேட்புமனு தாக்கல் செய்யலாம்!

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடளாவியரீதியில் 22 மாவட்ட செயலகங்களில் இந்த வேட்பு மனுத்தாக்கல் இடம்பெறவுள்ளது.

வேட்புமனுத்தாக்கல் செய்யப் படும் இறுதிநாளான 24ஆம் திகதி நண்பகலுக்கு முன்னர் அபேட்சகர் கள் மனுத்தாக்கல் செய்யமுடியும்.

தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 51 அரசியல் கட்சிகளில் 32 கட்சிகள் நடைபெற வுள்ள பொதுத்தேர்தலில் போட்டி யிடுகின்றன.

அத்துடன், வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர் பட்டி யலில் இடம்பெற்றுள்ள முதலாம் மற்றும் இரண்டாம் நபர்களே மாவ ட்டச்செயலகங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் ஏனை யோருக்கு அனுமதிவழங்கப்பட மாட்டாது எனவும் தேர்தல் ஆணையா ளர் அறிவித்துள்ளார்.

இன்று முதல் இடம்பெறவுள்ள வேட்புமனுத்தாக்கலின் போது சகல மாவட்டச் செயலகங்களுக்கும் முழு மையான பாதுகாப்பை வழங்குமா றும் தேர்தல் ஆணையாளர் பொலி ஸாரை கேட்டுள்ளார்.

இந்த முறை பொதுத்தேர்தலில் வாக்களிக்க 2002ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின்படி ஒரு கோடி 28 லட்சத்து 99 ஆயிரத்து 32 பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். (01)

## நாற்சந்தி



'தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு முடிவு கட்டுறதென்றே ஆனந்த சங்கரியார் நினைச்சிட்டார் போலை...'

'இது ஆனந்தமான விசயமில்லை... கூட்டணி தன்ரை சொந்த சொத்து மாதிரியெல்லை அவற்றை பேச்சிலை தொனிக்குது...'

தன்னைக் கேட்காமல்... தன்ரை அனுமதி பெறாமல் கூட்டணிக்காரர் எதுவுமே செய்யக்கூடாதாமென்றெல்லே சங்கரி யார் சட்டம் போட்டிருக்கிறார்...!

"கொஞ்சக் காலமா அவர் பேசுற பேச்செல்லாம் தமிழ்மக்களை குழப்புறதாத்தான் இருக்குது மணியம்... ஆர் ஆற்றையோ பேச்சைக் கேட்டுக்கொண்டு, அயலாக்களின்ரை அபிலாஷைகளை மனசிலை நினைச்சுக்கொண்டு, சொந்த இனத்தின் ஒற்றுமைக்கு வேட்டுவைக்கப் பார்க்கிறார்..."

"ஓமோம் கூட்டணியின் பெயரைச் சொல்லி கூட்டமைப்பைக் குழப்பப் பார்க்கிறார்... அதோட கூட்டணியையும் அழிக்கப்போறார்..."

"அவரும் சுயேச்சையாத்தான் கேட்கப்போறாராம்...?"

"சுய இச்சைப்படி கட்சியை நடத்த நினைப்பவர் கடைசியிலை சுயேச்சையாத்தானே போட்டியிடமுடியும்!"

"முதல்லை சமசமாஜக் கட்சியிலை இருந்து சோசலிஸம் பேசினார்... பிறகு காங்கிரசிலை சேர்ந்து தமிழரசுக்கட்சியை திட்டினார்... கடைசி யிலை கூட்டணியோடை வந்து ஒட்டிக்கொண்டு... எம்.பி.யாகி... இப்ப தலைவராகி... நிறைவேற்று அதிகாரம் தன்ரை கையில் இருக்கென் றெல்லே... தலைதடுமாறி நடக்கிறார்...!"

ஓமோம்... ஜனாதிபதியின் நண்பரெல்லே... ஜனாதிபதித்தனம் இருக் கத்தானே செய்யும்...!

அப்ப சங்கரியார் கூட்டணியின் நிறைவேற்று அதிகாரத் தலை வராகத் தன்னை நினைக்கிறார் என்று சொல்லுறாய் அப்படித்தானே...!"

"அவற்றை நடவடிக்கைளைப் பார்த்தால் அப்படித்தான் கிடக்குது...!

தெருவாசி

# பாதுகாப்பை குறைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

தாம் அமைச்சுக்களை மீளப்பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், ஜோன அமரதுங்க கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சராக மீண்டும் சத்தியப் பிரமாணம் செய்யவில்லை. அதனால் அவர் தொடர்ந்து அமைச்சராக செயற் படமுடியாது என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

அத்துடன், ஜோன் அமரதுங்க அமைச்சருக்குரிய பாதுகாப்பை பெற்றுக் கொள்வதாகவும், இதனால் இவருக்குரிய பாதுகாப்பை அகற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கும் பாதுகாப்பையே வழங்கு மாறும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவிடம் எழுத்துமூலம் கேட்டுள்ளார்.

# தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு லக்ஷ்மன் கதிர்காமர் தடைவிதிப்பு!

(கொழும்பு)

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்துக்கு வழங்கப்பட்டிருந்த தொ லைக்காட்சி ஒளிபரப்பு அனுமதியை அண்மையில் தகவல் தொடர்பு சாதன அமைச்சராக நியமிக்கப்ப ட்ட லக்ஷ்மன் கதிர்காமர் இரத்துச் செய்தார்.

சண், கோல்ட், ஷா, ஹிரு, சூரி யன் ஆகிய ஐந்து பண்பலை வானொலி ஒலிபரப்புக்களை மும் மொழிகளிலும் நடத்திவரும் ஆசிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் வெகு விரைவில் தொலைக்காட்சியொன்றை ஆரம்பிக்கவிருந்தது.

இதற்கான அனுமதி 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதமே அரசாங்க திடமிருந்து பெறப்பட்டிருந்தது. ஆனால், திடீரென காரணம் எதுவும் கூறப்படாமல் காபந்து அரசில் அமைச்சராக இருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த அனுமதியை நேற்று இரத்துச்செய்தார்.

இதேவேளை, அமைச்சர் லக்ஷ் மன் கதிர்காமரின் இந்த தடை உத் தரவுக்கு எதிராக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

அத்துடன், அமைச்சர் கதிர்கா மரின் இந்த உத்தரவுக்கு எதிரான தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று மேற்படி நிறுவ னத்திற்கு வழங்கியது. (01)

# சோனியாவின் விசேட...

மேலும் தெரிவித்ததாவது.

இன்று விடுதலைப்புலிகளின் தலைவருடன் நடைபெறவுள்ள மூன்று முக்கிய விடயங்கள் குறித்த பேச் சுக்கள் தொடர்பாக கடந்தமாதம் லண்டனில் விடுதலைப்புலிகளின அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கமும், சோனியா காந்தியின் தாயா ரான பயோலா மைனோ இருவரும் சந்தித்து முடிவெடுத்தனர். இது தொடர்பாக கையெழுத்திட்ட ஆவ ணக்குறிப்பு தமது பத்திரிகைக்கு நேற்று பக்ஸ் மூலம் அனுப்பப்பட்ட தாகவும் அப்பத்திரிகை மேலும் தெரி வித்துள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பை வந்தடைந்த எட்வோடா பெலாரோ, அங்கு ஒரு கருத்தரங் கில் கலந்துகொண்டார். அதன் பின் னர் நேற்றிரவு யாழ்ப்பாணம் வருவ தற்கு இவர் திட்டமிட்டிருந்தார். யாழ்ப் பாணம் செல்லும் இவரை புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்பார்கள். அத்து டன் விசேடமாக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர், மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபா ஆகியோரும் இவரை வரவேற்பர்.

யாழ்ப்பாணம் செல்லும் எட் வோடோ பெலாரோவை கிளிநொச் சிக்கு அழைத்துச் செல்லும் புலிகள் அங்கு இரகசியமான இடத்தில் புலி களின் தலைவரைச் சந்திக்க வழி செய்வர். கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தனியே யாழ்ப்பாணத் திற்கு செல்லவேண்டாமென இவ ருக்கு தெரிவித்தபோதும் அதனை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவரது யாழ்ப்பாண விஜயம் தொடர்பாக இந்திய உள்துறை அமைச்சு எவ்வித தகவலையும் வெளிப்படுத்தவில்லை.

அதேநேரம் யாழ்ப்பாணத்திற் கான பெலாரோவின் விஜயம் தொடர்பாக காங்கிரஸ் கட்சி இந் திய அரசாங்கத்திற்கு தெரிவித்தி ருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு தெரிவிக்கவில்லை.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும், பெலாரோவும் பொடா சட்டத்தின் கீழ் இதுதொடர்பாக விசா ரிக்கப்பட வேண்டுமெனவும் சுப்பிர மணியம்சுவாமி கேட்டுக் கொண்ட தாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஐ.தே.கட்சியில் இணைவு

அத்தனகல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால உறுப் பினருமான ஏ.ஜே.கருணாரத்தின நேற்று ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையகமான சிறிகோத்தாவில் தனது உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட் சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடமிருந்து இவர் பெற்றுக் கொண்டார்.

## பனையால் வீழ்ந்து ஒருவர் மரணம்

(பருத்தித்துறை)

பனையிலிருந்து தவறிவீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று மு.ப 11 மணிக்கு புலோலி உதய கதிர்காமம் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் வல்லி புரக் குறிச்சியைச் சேர்ந்த சிறிராமச் சந்திரன் (வயது 60) என்பவரே உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் மந்திகை மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணையின் பின் உறவினர்களி டம் கையளிக்கப்பட்டது.

## வொஷிங்ரனில்....

மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டார் கள் என பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

## கூட்டமைப்பு.....

மைப்பு போட்டியிடுவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந் திப்பின் பின்னரே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பு மனுக்கள் தொடர் பாக இறுதித்தீர்மானத்தை எடுக்க விருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாகவும், தற்போதைய அரசி யல் நிலைவரம் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும்.

## சமூகவிரோத....

வேறு கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம்பெறு வதால் இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் மிகுந்த கரிசனையுடன் செயற்படவேண்டும் என விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் வலி யுறுத்தப்பட்டது.

அத்தோடு போராளிகள் மீதான இராணுவக் கெடுபிடிகளும் நீக்கப் படுதல் வேண்டும் எனவும் வலியுறுத் தியதாகத் தெரியவருகிறது.

(ப)

# கூட்டணி உறுப்பினர்கள் மீதான தடையை விலக்குமாறு வழக்கு

## மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்

தமிழர் விடுதலைக் கூட்டணி யின் தலைவர் வி.ஆனந்தசங்கரி யின் அனுமதியின்றி அரசியல் நட வடிக்கையில் ஈடுபடுவதற்கு கூட் டணி உறுப்பினர்களுக்கு விடுக்கப் பட்டிருந்த தடை உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக் கல் செய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பர ராஜசிங்கம் ஆகியோர் தாக்கல் செய்த இந்த மனுவில் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி பிரதி வாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கூட்டணியின் தலைவர் வி.ஆனந்த சங்கரி கடந்த 11 ஆம் திகதி செய லாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் உட் பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கள் சிலருக்கு எதிராக, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த மாவட்ட நீதிவான் - கூட்டணித் தலைவரின் அனுமதியின்றி கட்சி நடவடிக்கை யில் ஈடுபடுவதற்கு தடை உத்தர வைப் பிறப்பித்திருந்தார்.

இந்தத் தடையுத்தரவு சட்டவி ரோதமானது என்று உத்தரவிடுமாறு கோரி நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், மனு மீதான தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை, மாவட்ட நீதிமன்றின் தடையுத் தரவை இடை நிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

# தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுமென தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பு

## விநாயகமூர்த்தி கூறுகிறார்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது கட்சியும் போட்டியிடவிருப்ப தாக தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட் சியின் தலைவர் அப்பாத்துரை விநா யகமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்ட அறிக்கை ஒன்றில் -

தேர்தலில் போட்டியிடுவது தொட ர்பாக தேர்தல் ஆணையாளருக்கு எமது கட்சி அறிவிக்கவில்லை என சில ஊடகங்களில் வெளியான செய் திகள் தவறானவை.

கட்சியின் செயலாளர் கஜேந்தி ரகுமார் பொன்னம்பலம் தேர்தல் ஆணையாளருக்கு எமது கட்சியும் போட்டியிடும் என்று அறிவித்துவிட் டார்.

தமிழ்த்தேசியக கூட்டமைப்பு எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டி யிடுவது கடினமானபடியால், இம் முறை தமது கட்சியின் சின்னத்தி லேயே போட்டியிட வேண்டுமென தாம் வலியுறுத்திவந்ததாகவும் அவ தமது அறிக்கையில் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமய என்று பெயர் மாற்றிய சிஹல உறுமய

## சங்கு சின்னத்தில் தேர்தலில் போட்டி

சிஹல உறுமய கட்சியின் பெயர் - 'ஜாதிக ஹெல உறுமய' என்று மாற்றப்பட்டிருப்பதுடன், சங்கு சின்னத்தில் தேர்தலைச் சந்திக்க விருப்பதாகவும் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் இந்த மாற்றங்களை அங்கீகரித்திருப்பதாக சிஹல உறுமயவின் பிரசார செய லாளர் உதய கம்மன்பில தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

கட்சியின் தலைவர் களுத் துறை மாவட்டத்திலும், கொழும்பு மாவட்டத்தில் சம்பிக ரணவக்கவும், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதி பர் எச்.எம்.பி.பி.கொட்டகதெனிய கம்பஹா மாவட்டத்திலும், வண. உடவத்த ஆனந்ததேரோ கண்டி மாவட்டத்திலும் போட்டியிடவுள் ளனர்.

டொக்ரர் நெவில் கருணாதிலக, பேராசிரியர் ஒலிவர் அபேநாயக்க, பேராசிரியர் சந்திரா விக்கிரம கமகே, உதய கம்பன்பில ஆகியோர் தேசி யப்பட்டியலில் இடம்பெறவிருப்ப தாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

# கூட்டணியில் போட்டியிடும்...

மூலமோ அல்லது நேரடியாக வேண்டுகோள் விடுத்திருந்தால் அவற் றின் பிரதிகள் விண்ணப்பதாரிக ளுக்கு நிபந்தனைகள் ஏதும் விதித் திருந்தால் அவை பற்றிய விபரங்கள்-

மேற்கூறிய விபரங்களையும், இந்த விடயங்களுடன் தொடர்புடைய வேறு ஆவணங்கள் இருப்பின் அவற்றின் விபரங்களும் தரப்படல் வேண்டும்.

அத்துடன், நீங்களும் கட்சியின் உபதலைவர் யோசப் பரராஜசிங்க மும் இணைந்து கிழக்கு மாகாணக் கூட்டணி வேட்பாளர் பட்டியலை தயா ரித்து விட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால், கட்சியின் மூத்த உறுப் பினர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏமாற்றமடைந்து கவலைப்படுவதாக எனக்குத் தெரி வித்துள்ளனர்.

ஆனால், நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீறி இவ்வாறான நடவடிக் கைகளில் நீங்கள் ஈடுபடமாட்டீர்கள்.

அவ்வாறு ஈடுபட்டால், நீதிமன்ற அவமதிபுக்குற்றத்துக்கு ஆளாவீர்கள் எனவும் அவர்களிடம் கூறியுள்ளேன்.

இருந்தபோதிலும், கிழக்கு மாகா ணத்தில் உங்கள் கைத்தடிகளையே வேடபாளர்களாக நிறுத்தத்தான் தேர் தல் நியமனம் தொடர்பான ஏற்பா டுகளை தாமதப்படுத்துகிறீர்கள் என உங்கள் மீது குற்றஞ்சாட்டவும் அவ கள் தவறவில்லை.

எனவே - சகல குறைகளையும் நிவர்த்தி செய்ய நான் கேட்டுக் கொண்ட ஆவணங்களை தந்துதவ வும், அவற்றைத் தருவதில் தாமதம் ஏற்படுமானால் நீங்கள் ஏதோ உள் நோக்கத்துடன் தேர்தல் நியமனக் குழுக் கூட்டத்தை தாமதப்படுத்துகின் றீர்கள் என்ற கிழக்கு மாகாணத்தவர் களின் கருத்தை நானும் ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவேன் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.